வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 27.06.2024 வியாழக்கிழமை இதழ் : 179 பக்கங்கள் : 12

## மின்சாரம் தாக்கிய இருவர் உயிருக்குப் போராட்டம்!

முல்லைத்தீவு, ஜூன் 27

மின்சாரம் தாக்கியதில் உயிருக்கு ஆபத்தான நிலையில் மீட்கப்பட்ட இளைஞர்கள் இருவர் முல்லைத்தீவு பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பில் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் வேணாவில், புதுக்குடியிருப்பு 10ஆம் வட்டாரத்தை சேர்ந்த 20 வயது இளைஞர்கள் இருவரே பாதிக்கப்பட்டனர்.

புதுக்குடியிருப்பு சந்தியிலுள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

நிறுவனத்தின் தண்ணீர் தொட்டியை சுத்திகரிப்பதற்காக இளைஞர் ஒருவர் கட்டடத்தின்

11

## நாட்டை மீட்ட என்னுடன் பயணிப்பதா? இருளில் இருக்கும் எதிரணி வேண்டுமா?

### மக்களே தீர்மானியுங்கள் என்கிறார் ஜனாதிபதி




கொழும்பு, ஜூன் 27

நாடு எதிர்நோக்கிய சவால்களை புரிந்து கொண்டு நடைமுறை சாத்தியமான தீர்வுகளால் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுத்த என்னுடன் பயணிப்பதா அல்லது இன்னமும் இருளில் அதிகாரத்தை தேடிக்கொண்டிருக்கும் எதிரணியுடன் பயணிப்பதா? என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும் - மக்கள் எடுக்கும் முடிவு ரணில் விக்கிரமசிங்கவின் எதிர்காலத்தைத் தீர்மானிக்காது - இவ்வாறு கூறியுள்ளார் ஜனாதிபதி

11

# சகல வழங்குநர்களுடனான கடன் மறுசீரமைப்பு நிறைவு!



பாரிஸ், ஜூன் 27

**சகல கடன் வழங்குநர்களுடனான உத்தியோகபூர்வ இரு தரப்பு கடன் மறுசீரமைப்பை இலங்கை நேற்று வெற்றிகரமாக நிறைவு செய்தது.**

நேற்று புதன்கிழமை முற்பகல் பாரிஸ் நகரில் கடன் வழங்குநர் குழுவுடன் இறுதி இணக்கப்பாடு எட்டப்பட்டது. இதே போன்று, சீனாவின் எக்ஸிம் வங்கியுடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் பீஜிங்கில் கையெழுத்திடப்பட்டது என்று ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த இணக்கப்பாடுகளுடன், இலங்கை தனது முக்கிய உத்தியோகபூர்வ இரு

11

## மாங்குளம் விபத்தில் மூன்று பேர் உயிரிழப்பு

### இருவர் படுகாயம்

மாங்குளம், ஜூன் 27

பழுதாகி நின்ற பேருந்தை திருத்திக் கொண்டிருந்தவர்களை அதே திசையில் பயணித்த லொறி மோதியதில் மூவர் உயிரிழந்தனர். இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

ஏ-9 வீதியில் முல்லைத்தீவு - மாங்குளம் - பனிக்கன்குளத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நள்ளிரவை அண்டிய நேரத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்துக் குறித்து மேலும் அறிய வருவதாவது,

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி சென்றுகொண்டிருந்த சொகுசு பேருந்து பனிக்கன்குளம் பகுதியில் இயந்திர கோளாறால்

11

## ஐ. சி. சியில் இலங்கையை பாரப்படுத்துவதே நீதிக்கு வழி!

### பிரிட்டன் தேர்தலில் களமிறங்கும் ஈழத் தமிழ் பெண் உமா குமரன்



லண்டன், ஜூன்

ஐ. நா. பாதுகாப்பு சபை மூலம் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் (ஐ. சி. சி.) பாரப்படுத்தினால் மட்டுமே நீதியை நிலை நாட்ட முடியும் என்று தெரிவித்துள்ளார் பிரிட்டனில் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் தொழில் கட்சியின் சார்பில் போட்டியிடும் ஈழத் தமிழ் பெண் வேட்பாளரான உமா குமரன்.

11

# அதிபர், ஆசிரியர்கள் பேரணிமீது நீர்த்தாரை, கண்ணீர்புகை வீச்சு!



கொழும்பு, ஜூன் 27

கொழும்பில் நேற்று அதிபர்கள், ஆசிரியர்கள் முன்னெடுத்த போராட்டத்தின்மீது தண்ணீர் தாரை மற்றும் கண்ணீர் புகை குண்டு வீச்சு நடத்தப்பட்டது. இதனால், கோட்டை, ஜனாதிபதி செயலக பகுதிகளில் பெரும் பதற்றநிலை காணப்பட்டது.

சம்பள உயர்வு, சம்பள நிலுவை உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து அதிபர்கள், ஆசிரியர் சங்கங்கள் நேற்று புதன்கிழமை சுகயீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபட்டனர். இலங்கை ஆசிரியர் சங்கத்தின் அழைப்பின் பேரில் முன்னெடுக்கப்பட்ட

11

கடற்படை சிப்பாய் மரணம்:

## கொலையாகக் கருதி விசாரிப்பதற்கு முடிவு

கொழும்பு, ஜூன் 27

இந்திய மீன்பிடி படகு மோதி கடற்படை சிப்பாய் உயிரிழந்தமையை கொலையாகக் கருதி விசாரணை நடத்தவுள்ளதாக கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

நெடுந்தீவு கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த இந்திய மீன்பிடி படகில் இருந்தவர்களை கைது செய்ய முற்பட்ட போது கடற்படை சிப்பாய்

11

## இன்றும் அதிபர், ஆசிரியர்கள் சுகயீன விடுமுறை போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜூன் 27

அதிபர், ஆசிரியர்கள் இன்று வியாழக்கிழமையும் சுகயீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபடுவர் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

கொழும்பில் அதிபர், ஆசிரியர்கள் மீது நேற்று நடத்தப்பட்ட தண்ணீர் தாரை பிரயோகம், கண்ணீர் புகைக் குண்டு வீச்சு என்பவற்றை கண்டித்தே இந்தப் போராட்டம்

11

## நாடு முழுவதும் நேற்று கற்பித்தல் சேவை முடக்கம்!

கொழும்பு, ஜூன் 27

அதிபர்கள், ஆசிரியர்கள் நேற்று முன்னெடுத்த சுகயீன விடுமுறை போராட்டம் காரணமாக நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளில் நேற்று கற்பித்தல் சேவை முழுமையாக முடங்கியது.

சம்பள உயர்வு, சம்பள நிலுவை உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து அதிபர்கள், ஆசிரியர் சங்கங்கள் நேற்று புதன்கிழமை சுகயீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபட்டன. இலங்கை

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப்போவதாக உத்தியோகபூர்வமாக அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டபோதிலும் கடைசி நேரத்தில் அவர் அதனை தவிர்த்திருக்கிறார்.

எதிர்வரும் பதினேழாம் திகதி தேர்தல் ஆணைக்குழு ஜனாதிபதித் தேர்தலுக்கான கடமைகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்க முடியும். அதுவரை, அதாவது தேர்தல் ஆணையாளர் தேர்தலுக்கான அறிவிப்பை உத்தியோகபூர்வமாக அறிவிக்கும்வரை தான் போட்டியிடும் அறிவிப்பை ஒத்திவைக்க ரணில் திட்டமிட்டாரெனத் தெரிய வருகின்றது. அரசாங்கம் தற்போது முன்னெடுத்துவரும் மக்கள் நலத் திட்டங்களை தொடர்வதற்கு வசதியாகவே தனது அறிவிப்பை அவர் ஒத்திவைத்திருக்கின்றார். ஆனாலும், அவர் போட்டியிடுவதும் தேர்தல் நடக்கும் என்பதும் திட்டவட்டமாகத் தெரியவந்திருக்கின்றது.

இனி தேர்தல் களம் களைகட்டத் தொடங்கும் கட்சித் தாவல்கள், அணி மாறுதல்கள் அடிக்கடி நடக்கலாம். இதுகாலம்வரை தேர்தல் களம் தனக்கு சாதகமாகும்வரை காத்திருந்தவர் ரணில். அவரின் முதல் எதிரியார் என்பது ஒன்றும் இரகசியமானதல்ல.

ரணில் விக்கிரமசிங்கவை பொறுத்தவரை ஐக்கிய தேசியக் கட்சி என்பது அவரின் உயிர்மூச்சு போன்றது. அவர் நாட்டின் தலைவராக இருப்பதைவிட அந்தக் கட்சியின் தலைவராக இருப்பதையே ஒரு காலத்தில் பெருமையாகக் கருதியவர். ஆனால், அந்தக் கட்சியை உடைத்து சின்னாபின்னமாக்கியவர் யார் என்பது நமக்குத் தெரிந்ததுதான். அந்த கோபமும் பகையும் அவர் மனதில் நிச்சயம் இருக்கும்.

அதனால்தான் கடந்த இரண்டு வருடங்களாக ஜனாதிபதியாக பதவியில் இருக்கின்றபோதும் அந்தக் கட்சியை எப்படி பலவீனப்படுத்தலாம் என்பதிலேயே அதிகம் கவனம் செலுத்தினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ ஒரு துணிச்சசல் அற்ற தலைவர் என்ற எண்ணத்தை மக்கள் மத்தியில் விதைக்க அவர் தொடர்ந்து முயற்சி செய்துவருகின்றார்.

இனி அவரோடு இருந்த முக்கிய தலைவர்கள் சிலரை தன்பக்கம் எடுத்து அவர்களைக் கொண்டே சஜித் பிரேமதாஸவுக்கு எதிரான பிரசாரத்தை நடத்துவார் என்பது அவரைத் தெரிந்தவர்களுக்கு தெரியும்.

இதேவேளை, மற்றைய பிரதான எதிர்க்கட்சியான ஜே. வி. பியின் தேசிய மக்கள் சக்திக்கு எதிராக பிரசாரத்தை தொடங்குவதற்காகவே தனியான அலுவலகம் ஒன்று இயங்கத் தொடங்கியிருக்கின்றதாம். அந்த அலுவலகத்திலிருந்து சமூகவலைத் தளங்கள் ஊடாக ஜே. வி. பிக்கு எதிரான பிரசாரம் இனி சூடு பிடிக்கும் என்கின்றன ஐ. தே. க. வட்டாரங்கள்.

ஒரு காலத்தில் ஜே. வி. பியில் இருந்தவர்கள் சிலர் இப்போது அவர்களோடு இல்லை. அவர்களைத் தேடிப்பிடித்து அழைத்துவந்து ஜே. வி. பிக்கு எதிராகப் பயன்படுத்த தீவிர முயற்சிகள் நடக்கின்றனவாம்.

இதேவேளை, இனி தனித்து ஒரு வேட்பாளரை களம் இறக்குவார்கள் என்று எதிர்பார்க்கப்படும் பொதுஜன பெரமுனவினரும் தமது பிரசாரத்தை ஜே. வி. பிக்கு எதிராகவே தொடுப்பார்கள் என்பதும் தெரிந்ததுதான். அவர்களைப் பொறுத்தவரை ரணில் வெற்றிபெறுவதே விருப்பத்துக்கு உரியதாக இருக்கும். ஜே. வி. பியினர் தவறியெனும் ஆட்சிக்கு வந்துவிடக் கூடாது என்பதில் அவர்கள் அவதானமாக இருப்பார்கள் என்பதும் எதிர்பார்க்கக்கூடியதுதான். ஆனாலும் அவர்கள் தரப்பில் யாரை களம் இறக்குவது என்பதும் இன்னமும் உறுதியாகவில்லை.

அதுவல்ல நாம் இன்று சொல்ல வருவது,

அண்மையில் மட்டக்களப்புக்கு சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனைத்துத் தரப்பினரையும் சந்தித்து தனக்கான ஆதரவை உறுதிப்படுத்திக்கொண்டு திரும்பியதைப் பற்றி முன்னரும் ஒரு தடவை இந்தப் பத்தியில் எழுதியிருந்தேன். அவர் அங்கு சென்று வந்த பின்னர், மட்டக்களப்பில் அரசியல் செய்யும் ஒரு தமிழ் அரசியல்வாதிக்கு மேலும் ஓர் அமைச்சுப் பதவியை வழங்கியிருக்கிறார். ஏற்கனவே கிழக்கில் நடக்கும் மணல் கொள்ளை பற்றி தமிழ் அரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட எம். பி. சாணக்கிய அடிக்கடி பொது வெளியில் கண்டனம் தெரிவித்து வருகிறார். அவர் யார் மீது அவ்வாறு கண்டனம் தெரிவித்து வருகின்றாரோ அவர்களில் ஒருவரையே மணல் எடுப்பதற்கான அனுமதியை வழங்கும் துறைசார்ந்த இராஜாங்க அமைச்சராக - அதாவது சுற்றுச்சூழல் இராஜாங்க அமைச்சராக நியமித்திருக்கிறார் ஜனாதிபதி. அது அவர் தமிழ் அரசுக்காரர்களின் குரலைக் கண்டுகொள்ளவில்லை என்பதற்கு நல்ல உதாரணம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த இருபதாம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எண்பதாயிரத்துக்கும் குறைவான வாக்குகளையே பெற்றிருந்தது. ஆனால், பிள்ளையான் என்ற சிவநேசதுரை சந்திரகாந்தனின் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி அறுபத்தியேழாயிரம் வாக்குகளையும் பொதுஜன பெரமுனவில் போட்டியிட்ட வியாழேந்திரன் முப்பத்திமூவாயிரம் வாக்குகளையும் பெற்று மொத்தம் ஒரு இலட்சம் வாக்குகளைப் பெற்றிருந்தனர். இந்த நிலையில் மேலும் பலவீனப்பட்டுப் போயிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போது இரண்டாகி யிருக்கின்றது. அதிலும் தமிழ் அரசு கட்சியும் தனக்குள் இரண்டாகியிருக்கின்றது. இந்நிலையில் தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் பேரம்பேசுவதை விடுத்து, பொரும்பான்மை வாக்குகளை வைத்திருக்கும் நபர்களை தன்பக்கம் எடுத்தால் எந்தவித பேரம் பேசலும் இல்லாமலே அவர்களை தன்பக்கம் எடுத்துவிடலாம் என்று கணக்கிட்டு ரணில் காய்நகர்த்தி வருகின்றார்.

இந்த இலட்சணத்தில்தான் இந்தத் தடவை மூன்று வேட்பாளர்கள் களத்தில் இருப்பதால் - தாங்கள் பேரம்பேசும் வலுவை கொண்டிருப்பதாகவும் மூன்று பேருடனும் பேரம் பேசி அதிகூடிய நன்மைகளைப் பெறப்போவதாகவும் நமது மக்கள் பிரதிநிதி ஒருவர் கூறிக்கொண்டிருக்கிறார்.

- ஊர்க்குருவி.

## மனித பாவனைக்கு உதவாத நெய் தயாரித்த, விற்றோருக்கு அபராதம்!

யாழ்ப்பாணம், ஜூன் 27

மனித பாவனைக்கு உதவாத, கலப்படம் செய்யப்பட்ட நெய்யை உற்பத்தி செய்த, விநியோகித்த, விற்பனை செய்தவரென மூவருக்கு 2 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்தது யாழ். நீதிவான் நீதிமன்றம்.

கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவின் ஊரெழு பொது சுகாதார பரிசோதகர் பிரிவில் அதற்கு பொறுப்பான பொது சுகாதார பரிசோதகர் எஸ். உதயபாலா தலைமையில் கடந்த வாரம் திடீர் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, பல்பொருள் அங்காடி ஒன்றில் விற்பனை செய்யப்பட்ட நெய்யின் மாதிரி அரச பகுப்பாய்வு திணைக்களத்துக்கு ஆய்வுக்கு அனுப்பப்பட்டது. ஆய்வில், நெய்யில் கலப்படம் செய்யப்பட்டமையும் அது மனித பாவனைக்கு உகந்தது அல்ல என்பதும் தெரியவந்தது.

இதையடுத்து, அந்த நெய்யை உற்பத்தி செய்தவர், அதனை விநியோகித்தவர், விற்பனை செய்தவரென மூவருக்கும் எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை நடந்த இந்த வழக்கு விசாரணையில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட மூவருக்கும் தலா 80 ஆயிரம் ரூபாய் அபராதமாக விதித்தார் நீதிவான் ஏ. ஏ. ஆனந்தராஜா.

(ஐ)

### 1,700 ரூபாய் ஊதியம்:

## வர்த்தமானியை சவாலுக்குட்படுத்திய மனுமீதான விசாரணை ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூன் 27

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த வேதன அதிகரிப்பு வர்த்தமானியை சவாலுக்கு உட்படுத்திய மனு மீதான விசாரணையை மேன்முறையீட்டு நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

நாளாந்த வேதனத்தை 1,700 ரூபாயாக அதிகரிக்கும் வகையில் அரசாங்கத்தால் அண்மையில் வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தது.

தொழில் அமைச்சால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பை சவாலுக்கு உட்படுத்தி, 21 பெருந்தோட்ட நிறுவனங்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தன.

அந்த மனு மீதான விசாரணை நேற்று மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் சோபிதராஜ கருணா முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கு தொடர்பில் எதிர்ப்புகள் முன்வைக்கப்பட்டன என்றுமனுதாரர் தரப்பினரால் நீதிமன்றத்துக்கு அறியப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து இந்த மனுவை எதிர்வரும் நவம்பர் மாதம் 8ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள மேன்முறையீட்டு நீதியரசர் குழாம் உத்தரவிட்டுள்ளது.

(ஐ)

## பயங்கரவாத சட்டத்தில் கைதானவருக்கு பிணை

கொழும்பு, ஜூன் 27

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதான கமலநாதன் விஜிந்தன் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

முகநூலில் விடுதலைப் புலிகளின் அமைப்பை மீள் உருவாக்கும் வகையிலான விடயங்களை பதிவு செய்ததன் மூலம் நாட்டில் இனப்பிரச்னை மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளை தூண்டும் வகையில் செயல்பட்டார் என்ற குற்றச்சாட்டில் அவர் கடந்த 19ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட விஜிந்தன் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் கடந்த 21ஆம் திகதி மறியலில் வைக்கப்பட்டார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் இந்த வழக்கின் சந்தேக நபர் சார்பாக நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து, நேற்று நீதிமன்றத்தில் சந்தேகநபரான கமலநாதன் விஜிந்தன் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

சந்தேகநபர் சார்பில் தனது கனிஷ்ட சட்டத்தரணிகள் பிருந்தா சந்திரகேஷ் மற்றும் தம்பிராஜா தயானந்தராஜாவுடன் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி கே. வி. தவராசா வாதத்தை முன்வைத்திருந்தார்.

அவரின் வாதத்தை ஏற்ற கொழும்பு நீதிவான் நீதிமன்றம் விஜிந்தனை பிணையில் விடுவித்தது.

(ஐ)

## யாழ்., கிளிநொச்சிக்கு பதில் அரச அதிபர்கள்!

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் பதில் அரச அதிபர்களாக ம. பிரதீபன், எஸ். முரளிதரன் ஆகியோரை பிரதமர் தினேஷ் குணவர்த்தன நியமித்துள்ளார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் கடமை நிறைவேற்று அரச அதிபர்களாக இருவரும் செயல்பட்டு வந்த நிலையில் இருவரும் பதில் அரச அதிபர்களாக நியமிக்கப்பட அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

இதைத் தொடர்ந்து இருவரையும் பதில் அரச அதிபர்களாக பொது நிர்வாக அமைச்சு நியமித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

## பதிவாளர் சேவையினர் இன்றும் நாளையும் சுகயீன விடுமுறை!

கொழும்பு, ஜூன் 27

பல்வேறு பிரச்னைகளுக்கு தீர்வு கோரி, நாடளாவிய ரீதியில் பதிவாளர் சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் இன்றும் நாளையும் சுகயீன விடுமுறையை அறிவித்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர்.

முறையான சேவை அமைப்பு, ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் உரிய சம்பள அதிகரிப்பு இன்றி தாம் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் என்று பதிவாளர் சேவை அலுவலர் சங்கத்தின் செயலாளர் பிரபாத் என் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கடந்த 2016ஆம் ஆண்டு முதல் இந்தப் பிரச்னைகளுக்கு தீர்வு கோரி பல்வேறு தரப்பினருடன் பேச்சு நடத்தியபோதிலும் இதுவரை தீர்வு கிட்டாமையால் இவ்வாறு தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு தீர்மானித்துள்ளனர் என்றும் அவர் கூறினார்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

27.06.2024 வியாழக்கிழமை

குரோதி வருடம், ஆனி 13

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

தொலைபேசி : 021 205 2300

# அவர்களது நினைப்பில் தவறில்லை...!

ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன கூறியிருக்கின்றார் - அதாவது, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரிக்கும் முடிவையே இரா. சம்பந்தன் எடுப்பார். மூத்த தலைவரான சம்பந்தன் கூறுவ தையே ஏனைய கட்சியினரும் கேட்பார்கள். எனவே, வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் ஆதரவு ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கிடைக்கும். அத்துடன், வஜிர கூறியிருக்கும் இன்னும் ஒரு விடயம் நாம் கூர்ந்து கவனிக்க வேண்டியது. அதாவது, "தமிழ் பொது வேட்பாளர் என்பது பயனற்ற ஒன்று" - ஏற்கனவே இவ் வாறானதொரு கருத்தை சம்பந்தனும் தெரிவித்திருக்கின்றார். சம்பந்தன் முன்னர் கூறியதையே வஜிர இப்போது உச்சரித்தி ருக்கின்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரின் நம்பிக்கையில் தவறில்லை. ஏனெனில், அந்தளவுக்கு சம்பந்தன் தங்களுடன்தான் இருப்பார் என்பதை அவர்கள் ஆணித்தரமாக நம்புகின்றனர். 1977இல் திருகோணமலை தொகுதியிலிருந்து பாராளுமன்றம் சென்ற இரா. சம்பந்தன் இன்றுவரையில் அரசியலில் தந்திரமாக சுழியோடும் ஒருவராகவே தன்னை அடையாளப்படுத்தியிருக்கின்றார்.

1994இல், சொந்தத் தொகுதியில் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து சிறிதுகாலம் அரசியலில் முகவரியற்றுப் போயிருந்த சம்பந்தன், தங்கத்துரையின் கொலையைத் தொடர்ந்து அவரின் இடத்துக்கு நியமிக்கப்பட்டார். இதையடுத்து, அவர் மீண்டும் விட்ட இடத்தைப் பிடித்துக் கொண்டார். தங்கத்துரையை கொன்றவர்கள் சம்பந்தனுக்கு அரசியல் அன்னமிட்டனர்.

அரசியலை ஏகபோகமாக விடுதலைப் புலிகள் தீர்மானித்த காலத்தில் அதன் தலைவர் பிரபாகரனை "தேசியத் தலைவர்" என்று கூறிய சம்பந்தன், பின்னர் விடுதலைப் புலிகளுக்கும் தனக்கும் எவ்வித தொடர்புமில்லை என்று தனது அரசியல் புத்தியை காண்பித்தார். அரசியல் குத்துக்கரணங்களுக்கு பிரபல்யமான சம்பந்தன் தனது கதிரையை பற்றிப் பிடித்துக்கொள்வதில் எப்போதுமே கவனமாக இருந்த ஓர் அரசியல்வாதி.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தோல்வியைத் தொடர்ந்து, சம்பந்தன் தமிழர் அரசியலில் தவிர்க்கவே முடியாத ஒருவரானார். ஆனால், தமிழ் மக்களுக்கான அவரது அரசியல் பங்களிப்பு என்னவென்றால் - எதுவுமில்லை. அவர் வாழும் காலத்திலேயே - அவர் தலைமை தாங்கி வழிநடத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடைந்துவிட்டது. அவரின் தாய்க் கட்சியான இலங்கை தமிழ் அரசு கட்சியின் எதிர்காலம் நீதிமன்றத்தின் தீர்ப்பில் தங்கியிருக்கின்றது.

இவ்வாறான ஒருவர் கூறுவதை ஏனைய கட்சிகள் கேட்கும் என்று ஐக்கிய தேசியக் கட்சியால் எவ்வாறு நம்ப முடிகின்றது? ஆனால், அவர்கள் எண்ணுவதுபோல் சம்பந்தனின் ஆதரவு அவர்களுக்கு நிச்சயம் கிடைக்கும். ஏனெனில், தமிழ் மக்களைப் பற்றி எப்போதுமே சிந்தித்திராத - சிந்திக்கவும் தெரியாத ஒருவரால் அவ்வாறுதானே செயல்பட முடியும்.

தனது இறுதிக் காலத்தில்கூட, தமிழ் மக்களுக்கு எந்த வகையிலும் நன்மை செய்துவிடக்கூடாது என்பதில் சம்பந்தனுக்கு நிகர் சம்பந்தன்தான். தமிழ்த் தேசிய அரசியல் வரலாறு சம்பந்தன் போன்ற ஓர் அரசியல்வாதியை இதுவரையில் கண்டதில்லை.

# அரச அதிகாரிகள், வாகனங்கள் பற்றிய கணக்கெடுப்பை நடத்துக

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்து

கொழும்பு, ஜீன் 27

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பயன்படுத்தக்கூடிய அரச அதிகாரிகள், அரச வாகனங்கள் பற்றிய கணக்கெடுப்பை மேற்கொள்ளுமாறு மாவட்ட தேர்தல் அலுவலகங்களுக்கு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

இதன்படி, தேர்தலுக்கு பயன்படுத்தக்கூடிய அரசு அதிகாரிகள் மற்றும் வாகனங்களின் எண்ணிக்கை குறித்து ஆவணங்கள் பெறப்படவுள்ளன.

இதேவேளை, மாவட்ட தேர்தல் பணிமனைகள் மூலம் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது. அதற்கான சிறப்பு படிவம் வெளியிடப்பட்டுள்ளதாக தேசிய தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஜூலை பிற்பகுதியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான அதிகாரம் முழுமையாக தேர்தல்கள் ஆணைக்குழு வசமாக உள்ள நிலையில் முதல் கட்ட நடவடிக்கையாக ஆணைக்குழு இந்த நகர்வில் ஈடுபட்டுள்ளது.

ஜூலை முதல் வாரத்தில் இருந்து தேர்தல் பிரசாரங்களை ஆரம்பிக்க நாட்டின் பிரதான கட்சிகள் ஆயத்தமாகி வருகின்றன. ஆளும் கட்சியை தவிர ஏனைய இரண்டு பிரதான கட்சிகளான தேசிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என்பன தமது பிரசாரத்துக்கான அட்டவணைகளை கூட தயாரித்துவிட்டன.

# காணாமல் போனதாக தேடப்பட்டவர் வெட்டுக்காயத்துடன் பொலிஸில் சரண்!

கிளிநொச்சி, ஜூன் 27

கடத்தப்பட்டு சித்திரவதைக்கு உள்ளான நிலையில் 24 நாட்களின் பின்னர் தப்பிய நபர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

கிளிநொச்சி - பாரதிபுரம் பகுதியை சேர்ந்த 48 வயதுடைய சிங்கராஜன் ஜெயக்குமார் என்பவரே இவ்வாறு பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

குறித்த நபரை கடந்த 2ஆம் திகதி முதல் காணவில்லை என்று கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்று புதன்கிழமை காலை காணாமல் போனார் என்று தேடப்பட்டு வந்த நபர் வெட்டுக் காயங்களுடன் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார்.

சரணடைந்த அவர், தன்னை ஒரு கும்பல் கடத்தி வைத்து சித்திரவதை செய்ததாக வாக்குமூலம் அளித்தார். கடத்தியவர்கள் தன்னை ஒரே இடத்தில் வைத்திருக்காது வெவ்வேறு இடங்களில் அடைத்து வைத்திருந்தனர் என்று சரணடைந்த நபர் கூறியுள்ளார்.

சரணடைந்த நபர் சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

# பாதாள உலகக் குழுக்களின் ஆயுதங்களை களைய நடவடிக்கை!

கொழும்பு, ஜூன் 27

எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி முதல் இரண்டு மாத கால விசேட நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்து பாதாள உலகக் குழுக்களின் துப்பாக்கிகளை பறிமுதல் செய்யுமாறு பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் பணிப்புரை விடுத்துள்ளார்.


பாதாள உலகத்தை ஒடுக்குவதற்கு அவர்களிடம் உள்ள துப்பாக்கிகள் தடையாக உள்ளன. இதனால், முப்படையினரின் ஆதரவுடன் இந்த விசேட நடவடிக்கை அமுல்படுத்தப்பட உள்ளது.

எவ்வாறாயினும், நாட்டில் தொடர்ந்தும் 'யுக்திய' நடவடிக்கையை தொடர்ந்து முன்னெடுத்து வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

'யுக்திய' நடவடிக்கையால் நாட்டில் குற்றச்செயல்கள் 23 வீதத்தால் குறைந்துள்ளது. இவ்வருட இறுதிக்குள் குற்றச் செயல்கள் 50 வீதத்தால் குறையும் என எதிர்பார்ப்பதாகவும் கடந்த ஆறு மாதங்களுக்குள் 5,000 போதைப்பொருள் வியாபாரிகள் 'யுக்திய' நடவடிக்கை மூலம் கைது செய்யப்பட்டனர் - பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனி - 27 வியாழக்கிழமை
குரோதி வருடம் - ஆனி 13
நல்ல நேரம் : 10.30 - 11.30
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : சஷ்டி

## இன்றைய ராசிபலன்

**மேடம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம்பெருகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். மதிப்பு கூடும் நாள்.

**இடபம்**
உறவினர்கள். நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். வியாபாரத்தில் எதிர்பாராத தன லாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். சாதித்துக் காட்டும் நாள்.

**மிதுனம்**
கடந்த 2 நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உத்தியோகத்தில் பழைய சிக்கல்கள் தீரும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிலர் உங்களை சீண்டிப் பார்ப்பார்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளை போராடி விற்பீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் ஈகோ பிரச்னை வந்து நீங்கும்.

**சிம்மம்**
பிள்ளைகள் உங்கள் பேச்சுக்கு மதிப்பளிப்பார்கள். ஆடை ஆபரணம் சேரும். சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். மேலதிகாரிகள் உங்களின் கவனத்தை ஈர்ப்பார்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**கன்னி**
அரசால் அனுகூலம் உண்டு. மற்றவர்களால் பயனடைவீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**துலாம்**
உங்களை சுற்றியிருப்பவர்களின் சுயரூபம் தெரிய வரும். வேலையாட்களிடம் கவனமாக நடந்து கொள்ளவும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும் நாள்.

**விருட்சிகம்**
திட்டமிட்ட காரியங்கள் தங்கு தடையின்றி முடியும். வீடு. வியாபாரத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்களை ஆதரிப்பார்கள். உழைப்பால் உயரும் நாள்.

**தனுசு**
உடன்பிறந்தவர்கள் வளர்ச்சிக்கு சாதகமாக இருப்பார்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளை விற்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். வெற்றிக்கு வித்திடும்.

**மகரம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த மன உளைச்சல் நீங்கி எதிலும் தெளிவு பிறக்கும். உடல் நலம் சீராகும். வியாபாரத்தில் இழந்ததை மீட்பீர்கள். மரியாதை கூடும். மகிழ்ச்சியான நாள்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தோல்வி மனப்பான்மையால் மன இறுக்கம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் கூடுதலாக வேலைப் பார்க்க வேண்டி வரும். விட்டுக் கொடுத்துப் போக வேண்டிய நாள்.

**மீனம்**
எதிர்காலம் பற்றிய பயம் வீண் டென்ஷன் வந்து செல்லும். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்னைகள் வரக்கூடும். கவனம் தேவைப்படும் நாள்.

# தி. மு. க. அரசாங்கத்தின் கைக்கூலி சி. பி. சி. ஐ. டி.

### கள்ளச்சாராய விவகாரத்தில் ராஜா சாடல்



திருச்சி, ஜூன் 27
சி. பி. சி. ஐ. டியே தி. மு. க. அரசாங்கத்தின் கைக்கூலியாக இருப்பதால்தான் கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய விவகாரத்தில் சி. பி. ஐ. விசாரணை கோருவதாக பா. ஜ. க. மூத்த தலைவர் எச். ராஜா சாடியுள்ளார்.

திருச்சியில் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு, முதல்வர் மு. க. ஸ்டாலின் தலைமையிலான தி. மு. க. அரசாங்கம் தீய நோக்கங்கள் கொண்ட அரசாங்கம். சாராயத்தில் என்ன நல்ல சாராயம், கள்ளச் சாராயம்? இந்த விவகாரத்தில் முதல் மூன்று மரணங்கள் நடக்கின்றன. இது தொடர்பான அறிக்கையை முதல்வருக்கோ, சம்பந்தப்பட்ட துறை அமைச்சருக்கோ தெரியாமல் மாவட்ட ஆட்சியர் கொடுத்திருப்பாரா?

183 பேர் சிகிச்சையில் உள்ளனர், 61 பேர் உயிரிழந்தனர். இப்படி இருக்கும்போது, இந்த விவகாரத்தை மறைக்க நினைக்கும் இந்த அரசாங்கத்தின் நோக்கம் தவறானது. அதனால்தான் பா. ஜ. க. சி. பி. ஐ. விசாரணை கோரியது. சி. பி. சி. ஐ. டியே இந்த தி. மு. க. அரசாங்கத்தின் கைக்கூலிதான். தீய நோக்கங்கள் கொண்டவர்கள்தான் இந்த அரசாங்கத்தின் கீழ் செயல்படுகிறார்கள்- என்றார். (எ)

# சி. பி. ஐ. விசாரணை கோருவது ஏன்?

### எதிர்க்கட்சி தலைவரிடம் முதல்வர் கேள்வி



சென்னை, ஜூன் 27
தன் மீதான ஊழல் குறித்து சி. பி. ஐ. விசாரணைக்கு நீதிமன்றம் உத்தரவிட்ட நிலையில், உச்ச நீதிமன்றம் சென்று தடை பெற்ற எதிர்க்கட்சித் தலைவர், தற்போது சி. பி. ஐ. விசாரணை கோரலாமா? என்று முதல்வர் மு. க. ஸ்டாலின் கேள்வியெழுப்பியுள்ளார்.

கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய விவகாரம் தொடர்பில் சட்டப் பேரவையில் அமளியில் ஈடுபட்ட அ. தி. மு. க. உறுப்பினர்கள் வெளியேற்றப்பட்டனர். இதனையடுத்து, முதல்வர் மு. க. ஸ்டாலின், அ. தி. மு. க. ஆர்ப்பாட்டம் மற்றும் சி. பி. ஐ. விசாரணை கோரியது தொடர்பாக சுட்டிக்காட்டி உரையாற்றினார்.

அ. தி. மு. கவினர் ஆர்ப்பாட்டம் செய்திருக்கின்றனர். ஆர்ப்பாட்டம் செய்வது நியாயம் தான். ஜனநாயகத்தில் எல்லோருக்கும் அந்த உரிமை இருக்கிறது. யார் வேண்டுமானாலும் ஆர்ப்பாட்டம் செய்யலாம். அது நியாயமான ஆர்ப்பாட்டமாக இருந்தால், அரசு அதற்கு அனுமதியளிக்கும். ஆனால், அந்த ஆர்ப்பாட்டத்திலே கூட திரும்பத் திரும்ப சி. பி. ஐ. விசாரணைக்கு உத்தரவிட வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளனர்.

இதே எதிர்க்கட்சித் தலைவர் பழனிச்சாமி முதல்வராக இருந்தபோது, அவர் மீது சி. பி. ஐ. விசாரணை கொண்டு வரப்பட்டதை அவர் மறந்திருக்க மாட்டார். எதிர்க்கட்சித் தலைவர் மீது ஒரு குற்றச்சாட்டைச் சொல்லி, அதில் முறைகேடு நடந்திருக்கிறது, அதற்கு சி. பி. ஐ. விசாரணை நடத்த வேண்டுமென்று தி. மு. க. அமைப்புச் செயலாளர் நீதிமன்றம் சென்ற போது, அதை சி. பி. ஐ. விசாரிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

சி. பி. ஐ. மீது நம்பிக்கை இருந்தால், அந்தச் சவாலை அவர் ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும். ஆனால்,சி. பி. ஐ. மீது நம்பிக்கை இல்லாத காரணத்தால், அதற்குத் தடை உத்தரவு வாங்கிய வீராதி வீரர்தான் இன்றைக்கு இந்த விடயத்தில் சி. பி. ஐ. விசாரணை வேண்டும் என்று முழங்குகின்றார்- இவ்வாறு முதல்வர் தெரிவித்தார்.

# சட்டப்பேரவையில் அமளி; அ. தி. மு. க. இடைநீக்கம்!



சென்னை, ஜூன் 27
சட்டப்பேரவை தொடங்கியதுமே இன்றும் (ஜூன் 26) அமளியில் ஈடுபட்ட அ. தி. மு. க. உறுப்பினர்கள் அவையில் இருந்து வெளியேற்றப்பட்ட னர். மேலும், அவை நடவடிக்கைக்கு தொடர்ந்து குந்தகம் விளைவித்ததாக கூறி நடப்பு கூட்டத்தொடர் முழுவதும் அ. தி. மு. க. உறுப்பினர்களை இடைநீக்கம் செய்து சபா நாய கர் அப்பாவு உத்தரவிட்டார்.

சட்டப்பேரவைக்கு தொடர்ந்து கறுப்பு மேலங்கி அணிந்து வந்த அ. தி. மு. கவினர், நேற்றும் கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய விவகாரத்தை விவாதிக்கக் கோரி அமளியில் ஈடுபட்டனர். கேள்வி நேரத்துக்கு பின்னர் பேச அனுமதி தருகிறேன் என சபாநாயகர் அப்பாவு கூறிய பின்பும் தொடர்ந்து அ. தி. மு. கவினர் இருக்கையில் அமராமல் அமளியில் ஈடுபட்டதால் நடப்பு கூட்டத்தொடர் முழுவதும் அ. தி. மு. க. உறுப்பினர்களை இடைநீக்கம் செய்து சபாநாயகர் அப்பாவு உத்தரவிட்டார். பேரவை விதிகளின்படி இடைநீக்க உத்தரவு பிறப்பிக்கப்படுவதாக சபாநாயகர் அறிவித்தார். (எ)

# காங்கிரஸுக்கு தகுதியில்லை

### சொல்கிறார் அண்ணாமலை

சென்னை, ஜூன் 27
அரசமைப்பு குறித்து பேசுவதற்கு காங்கிரஸ் கட்சிக்கு தகுதியில்லை- இவ்வாறு தமிழக பா. ஜ. க. மாநிலத் தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

நெருக்கடிநிலை கால போராட்ட வீரர்கள் சங்கம் சார்பில் காங்கிரஸ் ஆட்சியில் அவசரநிலை பிரகடனம் குறித்த கறுப்பு தின நினைவுக் கூட்டம் சென்னை தி.நகரில் உள்ள பா. ஜ. க. மாநில அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பா. ஜ. க. இந்த தேர்தலில் தனியாக 240 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. காங்கிரஸ் மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடாது என்பதில் நாட்டு மக்கள் தெளிவாக உள்ளனர்- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீழ்ச்சியை சந்திக்கும் ஆடை தொழில் துறை!

கொழும்பு, ஜூன் 27

**இலங்கையின் ஆடைத் தொழில்துறை வீழ்ச்சியை சந்தித்து வருகிறது. அண்மைய மாதங்களில் ஏற்றுமதி செயல்திறன் எதிர்பார்த்த மட்டத்தில் இல்லை.**

2022 ஆம் ஆண்டிலிருந்து 20 சதவீதம் குறைந்துள்ள கடந்த ஆண்டைப் போலவே தற்போதைய செயல்திறன் 4.5 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது என்று கூட்டு ஆடைகள் சங்க மன்றம் தெரிவித்துள்ளது.

கூட்டு ஆடைகள் சங்க மன்ற செயலாளர் நாயகம் யோஹான் லோரன்ஸ் கூறுகையில்-

இலங்கை பிராந்தியத்தில் போட்டித்தன்மையற்றதாக இருப்பதால், எங்களின் ஏற்றுமதிக்கு விலையேற்றம் மிகப்பெரிய சவாலாக உள்ளது.

அண்டை நாடுகள் மிகவும் கவர்ச்சிகரமான விலைகளை வழங்குவதால், இலங்கையின் ஆடை ஏற்றுமதிக்கு விலை நிர்ணயம் மிகவும் குறிப்பிடத்தக்க தடையாக உள்ளது.

சம்பள அதிகரிப்பு உட்பட மேலும் எந்தவொரு அழுத்தமும் பிரச்னையை மோசமாக்கலாம், இது இலங்கைக்கு உலக அரங்கில் போட்டியிடுவதை இன்னும் கடினமாக்கும்-என்றார்.

இதற்கிடையில், இலவச வர்த்தக வலயங்கள் மற்றும் பொது சேவைகள் ஊழியர் சங்கத்தின் இணைச் செயலாளர் அன்டன் மார்கஸ், அடிப்படைச் சம்பளம் தேக்கமடைந்துள்ளதால் ஆடைத் துறை ஊழியர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். மற்ற துறைகளைப் போலன்றி, ஊதியம் அதிகரித்துள்ள நிலையில், ஆடைத் தொழிலாளர்கள் இதே போன்ற மாற்றங்களைக் காணவில்லை. இது ஊழியர்களிடையே விரக்தியை அதிகரிக்கிறது.

நாளாந்த சம்பளத்தை 70 வீதத்தால் அதிகரிப்பதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியிருந்த தோட்டத் துறையில் மிக அண்மைக்காலமாக சம்பள அதிகரிப்பு காணப்பட்டது.

மார்கஸின் கூற்றுப்படி, ஆடைத் துறை ஊழியர்கள் ரூ.16,000 அடிப்படைச் சம்பளம் பெறுகின்றனர்.

2022 இல், தேசிய தொழிலாளர் ஆலோசனைக் குழு மற்றும் முதலாளிகள் குறைந்தபட்ச சம்பளத்தை ரூ.21,000 ஆக உயர்த்த ஒப்புக்கொண்டனர். எவ்வாறாயினும், அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்த போதிலும், தற்போதைய சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படாததன் காரணமாக, கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை, இதன் விளைவாக, ஆடைத் தொழிலாளர்களின் அடிப்படை சம்பளம் ரூ.16,000 ஆக உள்ளது என்று அவர் கூறினார்.

"இலங்கையின் ஏற்றுமதிப் பொருளாதாரத்திற்கு ஆடைத் தொழில்துறை ஊழியர்கள் இன்றியமையாதவர்கள். தேயிலை மற்றும் ரப்பர் தொழிலாளர்களின் சமீபத்திய ஊதிய உயர்வு, அவர்களின் தினசரி வருமானம் ரூ.1,700 ஆக உயர்த்தப்பட்டது, ஊதிய வாரியத்தால் ஒழுங்குபடுத்தப்பட்ட தொழில்களில் குறிப்பிடத்தக்க ஊதிய வேறுபாடுகளை எடுத்துக்காட்டுகிறது," என்று அவர் கூறினார்.

"ஊழியர்கள் ஆடைத் தொழிலாளர்களுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவுகளைக் கோருகிறார்கள், ஆனால் ஓடர்கள் இல்லாததைக் காரணம் காட்டி முதலாளிகள் அவற்றை நிறுத்தியுள்ளனர். இதன் விளைவாக, பல ஆடை ஊழியர்கள் தங்கள் தற்போதைய சம்பளத்தில் தங்களைத் தக்க வைத்துக் கொள்ள முடியாமல் ராஜினாமா செய்துள்ளனர், "என்று மார்கஸ் மேலும் கூறினார்.

(அ)

## கொழும்பு-அத்துகிரிய நெடுஞ்சாலை பரிமாற்று நிலையத்தில் பண மோசடி!

கொழும்பு, ஜூன் 27

கொழும்பு அத்துகிரிய நெடுஞ்சாலைப் பரிமாற்று நிலையத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் பல கோடி ரூபா மோசடி தொடர்பில் பிரதான காசாளர் உட்பட 22 காசாளர்களை பணி இடைநிறுத்தம் செய்துள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

2020ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்டுள்ள மின்சார நெருக்கடியை சாதகமாக பயன்படுத்திக் கொண்டு நடத்தப்பட்டதாகக் கூறப்படும் இந்த பாரிய பண மோசடி, மின்சாரத்தை துண்டித்துவிட்டு மின்சார கம்பிகளை அறுத்து மிகவும் தந்திரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

அத்துரிகிரிய நெடுஞ்சாலையில் 27 ஊழியர்கள் பணிபுரிவதுடன், அதில் 22 பேர் இந்த மோசடியில் ஈடுபட்டுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

அத்துடன் அத்துரிகிரிய நெடுஞ்சாலையில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு பாதுகாப்பு கமெராக்கள் செயலிழந்த நிலையில் வெளியேற வந்த வாடிக்கையாளர்களிடம் பயணச்சீட்டு வழங்காமல் பணம் வசூலித்து பாரியளவிலான பண மோசடி சிறிது காலமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

மேலும் 2024 ஜனவரி மாத இறுதியில், சில நாட்களில் பாதுகாப்பு கமெராக்களை செயலிழக்கச் செய்து கிட்டத்தட்ட 20 இலட்சம் ரூபாய் மோசடி நடந்துள்ளமை தெரியவந்துள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

(அ)

## நிவித்திகலவில் துப்பாக்கிச்சூடு!

கொழும்பு, ஜூன் 27

நிவித்திகல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாதகட பகுதியில், மர்ம நபர் ஒருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காயமடைந்தவர் தனது மருமகனுடன் வீட்டு முற்றத்தில் இருந்தபோது, அங்கு வந்த மர்ம நபர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபரின் காலில் காயம் ஏற்பட்டு நிவித்திகல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதற்கான காரணம் இது வரை வெளியாகவில்லை எனவும் இது குறித்து விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(அ)

## புன்னைநீராவியில் இராணுவ முகாம் காணி அளவீட்டுக்கு மக்கள் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 27

புன்னை நீராவி கிராமத்தில் இராணுவ முகாம் காணி அளவீட்டுக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு அளவீடு நிறுத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் உள்ள புன்னைநீராவி கிராமத்தில் இராணுவ முகாம் அமைந்துள்ள காணியினை அளவீடு செய்வதற்காக நேற்று முன் தினம் நில அளவைத் திணைக்களத்தினர் சென்றுள்ளனர்.

அத்திணைக்கள உத்தியோகத்தர்களை காணி உரிமையாளர்களில் உதவியுடனும் பிரதேச மக்கள் உதவியுடனும் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. இதன்போது, கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் சண்முகம் ஜீவராஜ் குறித்த அளவீடு செய்யும் பணிக்கு எதிர்ப்பு தெரிவித்தார்.

(அ)

## ஹெரோயினுடன் கைப்பற்றப்பட்ட மீன்பிடி படகு உரிமையாளர் கைது

கொழும்பு, ஜூன் 27

200 கிலோவுக்கும் அதிக எடையுடைய ஹெரோயினுடன் நேற்று முன் தினம் கைப்பற்றப்பட்ட மீன்பிடிக் கப்பலின் உரிமையாளர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பைச் சேர்ந்த 38 வயதான சந்தேகநபர் மாலை தீவுக்கு தப்பிச்செல்ல முயற்சித்த சந்தர்ப்பத்தில் கைது செய்யப்பட்டார்.

நேற்று முன் தினம் இரவு 8.35 அளவில் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து மாலைதீவு நோக்கிச் செல்லத் தயாராகவிருந்த விமானத்தில் பயணிக்கவிருந்த நிலையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் தற்போது கொழும்பு போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் தலைமையகத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

இதனிடையே, மேற்கு கடற்பரப்பில் ஹெரோயின் கைப்பற்றப்பட்ட நீண்ட நாள் மீன்பிடிப் படகு காலி துறைமுகத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

ஹெரோயினுடன் கைது செய்யப்பட்ட 6 பேரும் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ)

# கோழி இறைச்சி, முட்டைகள் உண்பவர்களுக்கு எச்சரிக்கை!

கொழும்பு, ஜூன் 27

கோழி இறைச்சி மற்றும் முட்டைகள் நன்கு வேகவைத்து சமைக்கப்படுவதை உறுதி செய்து கொள்ளுமாறு சுகாதார அமைச்சு பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை பச்சையாகவோ அல்லது நன்கு வேகவைக்கப்படாத கோழி இறைச்சி மற்றும் கோழி இறைச்சியால் செய்யப்பட்ட உணவுகளை உட்கொள்வதை தவிர்க்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்தியாவில் பரவி வரும் பறவைக் காய்ச்சல் தொடர்பாக சுகாதார அமைச்சின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதையடுத்து சுகாதார அமைச்சின் சுகாதார மேம்பாட்டுப் பணியகம் இந்த விழிப்புணர்வு அறிவுறுத்தலை விடுத்துள்ளது.

தற்போது மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் நுண்ணுயிர்ப் பிரிவானது எச் 5 மற்றும் எச் 7 மாறுதல்கள் மற்றும் எச் 9 இன் புளூஎவன்ஸா மாறுதல்கள் போன்றவற்றையும் கண்டறியத் தேவையான பி.சி.ஆர் பரிசோதனை வசதிகளை நிறுவியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பறவைகள் மத்தியில் பரவும் பறவைக் காய்ச்சல் சில சமயங்களில் மனிதர்களையும் தாக்கும் என்பதால் பறவைகளையோ அல்லது அவற்றின் எச்சங்களையோ தொடக்கூடாது என்றும், கோழிப் பண்ணைகளுக்குச் செல்வதைத் தவிர்க்குமாறும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மேலும் நோய்வாய்ப்பட்ட அல்லது இறந்த பறவைகள் தங்கள் பகுதிகளில் காணப்பட்டால், உடனடியாக உள்ளூர் சுகாதார அதிகாரிகளுக்கு தெரிவிக்குமாறும் சுகாதார அமைச்சு பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

(அ)

## பொன்சேகா வெளியேறின் வாக்கு வங்கி அதிகரிக்கும்!

### கூறுகிறது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, ஜூன் 27

பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா வெளியேறுவதால் ஐக்கிய மக்கள் சக்திக்கு எவ்வித தாக்கமும் ஏற்படப்போவதில்லை. மாறாக வாக்கு வங்கி அதிகரிக்கும் என்று அக்கட்சியின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா வெளியேறுவதால் கட்சிக்குரிய வாக்குகள் குறையபோவதில்லை. மாறாக வாக்கு வங்கி அதிகரிக்கும்.

ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்டதால் தான் பொன்சேகாவுக்கு அதிகூடிய விருப்பு வாக்குகளை கம்பஹா மாவட்டத்தில் பெற முடிந்தது. கட்சியை விட்டு அவர் தனித்து களமிறங்கினால் அவருக்கு வாக்குகள் கிடைக்கப் போவதில்லை.

அதேவேளை, ஜனாதிபதி அழைப்பு விடுத்தால்கூட ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் அரசுடன் இணையப்போவதில்லை. இது உறுதி. சஜித், ரணில் சங்கமமும் சாத்தியமற்ற தொன்றாகும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 100 பில்லியன் டொலர்களை தாண்டிய அரச பொதுக்கடன்

## விளக்கமளிக்கிறது நிதி அமைச்சு

கொழும்பு, ஜுன் 27

**2024 நிதியாண்டின் முதல் காலாண்டின் இறுதியில் அரசாங்க பொதுக்கடன் அளவு 100 பில்லியன் டொலர்களை தாண்டியுள்ளது.**

கடன் தொகை சுமார் 4 பில்லியன் டொலர்கள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படும் இலங்கை நிதியமைச்சின் அறிக்கை தொடர்பிலும் அதிகளவில் பேசப்பட்டு வருகிறது.

உண்மையிலேயே, பொதுக் கடன் அளவு அதிகரித்து விட்டதா எவ்வாறு அதிகரித்தது என்ற கேள்வி பொருண்மிய அவதானிகள் மத்தியில் எழுந்துள்ளன.

"2023 இறுதியில் பொதுத்துறை கடன் = 96,170 மில்லியன் அமெரிக்க டொலர்

2024 மார்ச் மாத இறுதியில் பொதுத்துறை கடன் = 100,184 மில்லியன் அமெரிக்க டொலர்

2024 முதல் காலாண்டில் கடன் அதிகரிப்பு = 4,014 மில்லியன் அமெரிக்க டொலர்"

மேற்குறிப்பிட்ட புள்ளிவிவரங்கள் நிதி அமைச்சு மூலம் வெளியிடப்பட்ட அறிக்கையொன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நான்கு மாத காலப்பகுதிக்குள் 4 பில்லியன் அமெரிக்க டொலர்களால் பொதுக்கடன் அளவு அதிகரித்துள்ளது.

அப்படியெனில், குறித்த காலப்பகுதியில் புதிதாக கடன் தொகைப் பெறப்பட்டதா என்று ஒரு கேள்வி எழுப்பப்படுகிறது.

எனினும், 2022 இல் இலங்கைத்தீவில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் போது இந்தியா 4 பில்லியன் அமெரிக்க டொலர்களைக் கடனாக வழங்கயிருந்து.

2019 ஆம் ஆண்டு தொடக்கம் காணப்பட்ட வரவு செலவு திட்ட பற்றாக்குறையுடன் டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதியும் அதிகரித்தமையால் இந்த கடன் தொகை நிலையாக காணப்பட்டு வருவதாக நிதி அமைச்சின் அறிக்கை மறைமுகமாக வெளிப்படுத்துகிறது. (அ)

# மின்சாரம் தாக்கி மாணவன் மரணம்

கொழும்பு, ஜுன் 27

கல்கிரியாகம - திக்வெண்ணாகம பிரதேசத்தில் மின்சாரம் தாக்கியதில் 17 வயது பாடசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கல்விப் பொதுதராதர சாதாரணதர பரீட்சைக்குத் தோற்றிய குறித்த மாணவன் பெறுபேறுகளுக்காக காத்திருக்கும் நிலையிலே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தோட்டத்தில் பொருத்தப்பட்டிருந்த வானொலியில் ஏற்பட்ட மின்சாரக் கோளாறை சரி செய்வதற்கு முற்பட்ட போதே மாணவன் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மின் தாக்குதலுக்குள்ளான மாணவன் ஆபத்தான நிலையில், அடியாகலை பிரதேச வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக தம்புள்ளை மாவட்ட வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார்.

இருப்பினும், குறித்த மாணவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# 64 பவுண் தங்கநகை, ரூ. 8 இலட்சம் பணம் ஊர்காவற்றுறை ஆலயமொன்றில் திருட்டு

யாழ்ப்பாணம், ஜுன் 27

ஊர்காவற்றுறையில் உள்ள ஆலயமொன்றில் 64 பவுண் தங்கநகைகள் மற்றும் சுமார் 08 இலட்சம் ரூபாய் பணம் போன்றவை திருடப்பட்டுள்ளன.

ஆலயத்தினுள் பாதுகாப்பாக பெட்டகத்தில் வைக்கப்பட்டிருந்த நகைகள் மற்றும் பணமே திருட்டுப்போயுள்ளன. போலித் திறப்புக்களை பயன்படுத்தி பூட்டை திறந்து பொருட்களை திருடியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

# கென்யாவில் இலங்கையர் பாதுகாப்பாக உள்ளனர்!

கொழும்பு, ஜுன் 27

கென்யாவில் வசிக்கும் அனைத்து இலங்கையர்களும் பாதுகாப்பாக உள்ளதுடன், நைரோபியில் உள்ள இலங்கை தூதரகம் நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாக தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் ஆயிரக்கணக்கான எதிர்ப்பாளர்கள் கென்யாவின் பாராளுமன்றத்தின் வரி முன்மொழிவுகளை எதிர்த்து முற்றுகையிட்டதுடன் கட்டடத்தின் ஒரு பகுதியை எரித்துள்ளனர்.

எதிர்ப்பாளர்கள் தப்பியோடிய நிலையில் பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

மேலும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நிதிச் சட்ட மூலத்தை எதிர்க்கும் போராட்டக்காரர்களின் பின்னணியில் சிலர் இருப்பதாக இலங்கைக்கான கென்யா தூதுவர் கனக நாதன் தெரிவித்தார்.

எமது அனைத்து இலங்கையர்களும் பாதுகாப்பாக உள்ளதுடன், எந்த ஒரு ஆபத்தான சூழ்நிலையும் இல்லை என்பதையும் உறுதிப்படுத்தியுள்ளதாகத் தெரிவித்த அவர், நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

# இலங்கை பெற்ற மொத்தக் கடனில் சிறு பகுதி மட்டுமே செலுத்தப்பட்டது

## சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜுன் 27

நாடு மீண்டும் முழுமையான கடனைச் செலுத்தும் நிலைக்கு சென்றதன் பின்னரே மக்களால் உண்மையான மகிழ்ச்சியை அனுபவிக்க முடியும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

பிரபஞ்சம் வேலைத்திட்டத்தின் 259ஆம் கட்டமாக பாதுக்க பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றுக்கு 12 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஸ்மார்ட்




வகுப்பறை உபகரணங்களை வழங்கிய பின்னர் கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கொவிட்-19 பரவல் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டு மக்கள் பல இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

தற்போது நாட்டின் மொத்தக் கடனில் சிறு பகுதி மாத்திரமே மீளச் செலுத்தப்பட்டுள்ளது. முழுமையான கடனை மீளச் செலுத்தினால் மாத்திரமே மக்கள் மகிழ்ச்சியடைய முடியும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார். (அ)

# சங்கத்தானை கந்தசுவாமி கும்பாபிஷேக மலர் வெளியீடு





யாழ்ப்பாணம், ஜுன் 27

சாவகச்சேரி சங்கத்தானை அருள்மிகு வைரவசுவாமி கந்தசுவாமி கோவில் மகா கும்பாபிஷேக சிறப்பு மலர் வெளியீட்டு விழா கடந்த 24ஆம் திகதி இரவு ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது.

ஆலய பரிபாலன சபை தலைவர் பலாலி ஆசிரியர் கலாசாலை முன்னாள் அதிபர் கு. சதாசிவமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வை ஆலய திருப்பணிச் சபை தலைவர் யாழ். இந்து கல்லூரி ஆசிரியர் ச.சுகீரதன் நெறிப்படுத்தினார்.

நிகழ்வில் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ தேவ. பிரசன்னா குருக்கள் ஆசியுரை வழங்கினார்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் மலரின் வெளியீட்டுரை ஆற்றினார். யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் நிறைவேற்று அதிகாரி பேராசிரியர் க.கந்தசாமி மங்கல விளக்கேற்றினார்.

சின்ன நல்லூர் என்ற அடைமொழியால் சிறப்பிக்கப்படும் இந்த ஆலயம் பெரிய அளவில் புனரமைப்பு செய்யப்பட்டு கடந்த ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (அ)

# சாவகச்சேரியில் குப்பையோடு போடப்பட்ட 42 பவுண் நகைகள்!

## இதுவரை மீட்கப்படவில்லை

யாழ்ப்பாணம், ஜுன் 27

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்கத்தானைப் பகுதியில் 42 பவுண் தங்க நகைகள் தவறுதலாக குப்பையோடு குப்பையாக போடப்பட்ட சம்பவம் தொடர்பான கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

போத்தல் ஒன்றினுள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த 42 பவுண் தங்க நகைகள் தவறுதலாக குப்பையோடு குப்பையாக கழிவு வைக்கப்படும் இடத்தில் வைக்கப்பட்டு, பின்னர் அது கழிவகற்றும் வாகனம் ஊடாக சாவகச்சேரியில் உள்ள குப்பை மேட்டை வந்தடைந்துள்ளது.

இந்நிலையில், தமது நகைகள் தவறுதலாக குப்பையோடு போடப்பட்டதை உணர்ந்த உரிமையாளர்கள் இது தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

இது தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸார் சம்பந்தப்பட்ட தரப்பினரை அழைத்து விசாரணை நடத்தியபோதிலும் இதுவரை காணாமல்போன நகைகள் தொடர்பாக எந்த விதமான தகவல்களும் கிடைக்கப்பெறவில்லை என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, கடந்த ஒரு வருடத்துக்கு முன்னரும் சாவகச்சேரியில் இது போன்றதொரு சம்பவம் நடந்த நிலையில் சாவகச்சேரி நகரசபையின் ஊழியர்கள் தேடுதல் நடத்தி தவறுதலாக குப்பை மேட்டை வந்தடைந்த 18 பவுண் நகைகளை மீட்டு உரிமையாளரிடம் கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீசாலை வடக்கு தட்டாங்குளம் வீதியை புனரமைத்து தாருங்கள்!

## ஆர்ப்பாட்டத்தில் குதித்த பொதுமக்கள்



யாழ்ப்பாணம், ஜூன் 27

**சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட மீசாலை வடக்கு தட்டாங்குளம் வீதியினை புனரமைத்து தருமாறு கோரி அப்பகுதி மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.**

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன்பாக நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் குறித்த வீதியை பயன்படுத்தும் 5 கிராமசேவகர் பிரிவுகளை சேர்ந்த மக்கள் கலந்துகொண்டனர்.

ஐந்து வருடங்களாக புனரமைக்கப்படாத இந்த வீதியால் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பயன்படுத்துகின்றபோதிலும் மிக மோசமான நிலையில் வீதி பாதிக்கப்பட்டுள்ளதாக போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

3 மணித்தியாலங்களுக்கும் மேலாக நடைபற்ற ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் ஐவர் ஆளுனரின் செயலாளரை சந்தித்து ஆளுநரின் ஊடாக ஜனாதிபதிக்கான மகஜரும் கையளிக்கப்பட்டது. (அ)

# ஆசனவாயில் இருந்த கோடி ரூபாக்கள் பெறுமதியான தங்க ஜெல் உருண்டை!

## கட்டுநாயக்கவில் சிக்கிய ஆறு இலங்கையர்கள்

கொழும்பு, ஜூன் 27

கட்டுநாயக்க விமான நிலையத்தில் 18 கோடி ரூபா பெறுமதியான தங்க ஜெல் உருண்டைகளுடன் 06 இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.


கைது செய்யப்பட்டவர்கள், துபாயில் இருந்து சென்னைக்கு வந்து அங்கிருந்து நேற்று முன்தினம் பிற்பகல் 01.20 மணியளவில் இண்டிகோ ஏர்லைன்ஸ் விமானம் 6ஈ-1175 மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

கைதானவர்கள், கல்முனை, மூதூர், கொழும்பு-10, மற்றும் மினுவாங்கொடை ஆகிய இடங்களில் வசிக்கும் 30 வயதுக்கும் 50 வயதுக்கும் இடைப்பட்ட ஆறு பேர் எனவும், இவர்கள் அடிக்கடி விமானத்தில் பயணிப்பவர்கள் எனவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

விமான நிலைய சுங்க அதிகாரிகள் ஸ்கான் சோதனைக்கு அனுப்பியதை அடுத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதன்போது, அவர்களில் 4 பேர் மலக்குடலில் தங்க ஜெல் உருண்டைகளை மறைத்து வைத்திருந்ததாகவும், மேலும் இருவர் 08 கிலோ 632 கிராம் எடையுள்ள தங்க ஜெல் உருண்டைகளை பயணப் பொதிகளில் வைத்திருந்ததும் தெரியவந்துள்ளது. (அ)

# இலங்கையின் முதல் பெண் மாலுமி தடைகளைத் தாண்டி சாதித்த யுவதி



கொழும்பு, ஜூன் 27

இலங்கையின் முதல் பெண் மாலுமி என்ற அங்கிகாரத்தை நயோமி அமரசிங்க என்பவர் பெற்றுள்ளார்.

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் பயிற்சி நெறியை முடித்தன் பின்னர் அவர் இந்த அங்கீகாரத்தை பெற்றுள்ளார்.

ஊடகவிலாளராக வர ஆசைப்பட்ட அவர், வேலை தேடுவதில் ஏற்பட்ட சிரமம் காரணமாக பல்வேறு பணிகளில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், குடும்பத்தினரின் ஆட்சேபனைகள் மற்றும் பாலினத் தடைகளைத் தாண்டி மஹாபொல துறைமுகங்கள் மற்றும் கடல்சார் அக்கடமியில் தனது பயிற்சியை நிறைவு செய்தார்.

இதனையடுத்து கார்னிவல் குரூஸ் லைனில் பணிபுரிந்த அவர், உலகம் முழுவதும் பயணம் செய்ததுடன், பல நடைமுறை அனுபவங்களையும் பெற்றுக் கொண்டார்.

ஆண் ஆதிக்கம் செலுத்தும் துறையில் பாலினத் தடைகளைத் தகர்த்து, இன்று ஒரு அதிகாரியாக மாறியுள்ளார்.

இந்நிலையில், கப்டன் தர நிலைக்கு உயர்வதே தனது இலக்கு என நயோமி தெரிவித்துள்ளார். (அ)

# ஜனாதிபதி தேர்தலில் பொதுவேட்பாளர் குறித்து மட்டக்களப்பில் விழிப்புணர்வு கலந்துரையாடல்







மட்டக்களப்பு, ஜூன் 27

இலங்கையில் ஜனாதிபதி தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில், வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது குறித்து பேசப்பட்டு வருகின்றது.

குறிப்பாக பொது வேட்பாளரை நிறுத்துவதன் அவசியம் குறித்து வடக்கு கிழக்கில் மக்களுக்கு தெளிவூட்டும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதன்படி, கிழக்கு மாகாணம் மட்டக்களப்பு வாகரை பிரதேசத்திற்குட்பட்ட பகுதியில் பொது அமைப்புகளினால் இவ்வாறான நிகழ்வு ஒன்று ஒழுங்குசெய்யப்பட்டிருந்தன.

கதிரவெளி கிராமத்தில் உள்ள கணியவள (இல்மனைட்) மற்றும் இறால் பண்ணைத் திட்டத்திற்கு எதிரான அமைப்புக்கள், கதிரவெளி கிராம அபிவிருத்தி சங்கம் என்பவற்றுடன் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பான விழிப்புணர்வு கலந்துரையாடல் நடைபெற்றது. (அ)

# மேலதிக வகுப்புகளுக்காக ஆண்டுக்கு ரூ.200 பில்லியன் செலவிடும் பெற்றோர்!

கொழும்பு, ஜூன் 27

இலங்கையில் மேலதிக வகுப்பு கற்பித்தல் தொழில் முறைப்படுத்தப்படவேண்டும் என பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளியல் மற்றும் புள்ளியியல் கற்கைகள் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துக்கோரள தெரிவித்துள்ளார்.

குறித்த கற்பித்தல் தொழில் மூலம் பெற்றோர்களிடமிருந்து ஆண்டுக்கு சுமார் 200 பில்லியன் ரூபாய் புழக்கத்தில் விடப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது போட்டித் தன்மையுடன் கூடிய தேர்வு முறையால் பெற்றோர்கள் பெரிய அதிக தொகையை செலவழித்து தங்களுடைய பிள்ளைகளை மேலதிக வகுப்புகளுக்கு அனுப்புவதாகவும் விசேடமாக 3,4,5, 10,11 மற்றும் 12,13 போன்ற தரங்களிலுள்ள அதிகளவான மாணவர்கள் அநேகமான மேலதிக வகுப்புகளில் கலந்து கொள்வதாக தெரியவந்துள்ளது.

அதன் ஒட்டுமொத்த சந்தை மதிப்பைப் பார்க்கும் போது, ஆண்டுக்கு 200 பில்லியன் ரூபாய் பரிமாற்றம் இதனுள் நடத்தப்படுவதாக பேராசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், தற்போது மேலதிக வகுப்புகளை ஒழுங்குபடுத்துவது இல்லை எனவும் , மேலதிக வகுப்புகளை ஒழுங்குபடுத்துவதும், வரி விதிப்புக்கு சமர்ப்பிப்பதும் அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

அதற்காக, தற்போது அரசாங்கம் தலையிடாவிடின், பாடசாலைக் கல்வி நிலைகுலைந்து, மேலதிக வகுப்புகளின் வலையில் சிக்கிவிடும் என அவர் தெரிவித்தார்.

தற்போதுள்ள நிலைமை குறித்து விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், பெற்றோர்கள் மேலதிக வகுப்புகளுக்குச் செய்யும் செலவுகள் குறித்தும் சரியான புரிதல் மற்றும் குழந்தைகள் ஏன் மேலதிக வகுப்புகளில் பங்கேற்கிறார்கள் என்பது குறித்தும் ஆராயப்பட வேண்டும் என்றும் வசந்த அத்துக்கோர குறிப்பிட்டார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த பேராசிரியர் வசந்த அத்துகோரள-

சம்பந்தப்பட்ட பாடங்களில் சித்தியடையாதவர்கள் கூட மேலதிக வகுப்புகளுக்கு வந்து பாடம் கற்பிக்கிறார்கள். அவர்களின் தகுதிகள் ஏதேனும் ஒரு வகையில் சரிபார்க்கப்பட வேண்டும். சில கட்டமைப்புகள் இருக்க வேண்டும். கல்வி சீர்திருத்தத்தில் தனியார் கல்வியையும் சேர்க்க வேண்டும். இதில் கல்வி அமைச்சுக்கு பெரும் பங்கு உள்ளது-என்றார். (அ)

# பெண் ஊழியரை முத்தமிட்ட மேலாளருக்கு 7 வருட சிறை!

கொழும்பு, ஜூன் 27

கடந்த 2011ஆம் ஆண்டு தனக்குக் கீழ் பணி புரிந்த பெண் எழுதுநர் ஒருவரை கட்டித்தழுவி முத்தமிட்ட குற்றத்திற்காக நிறுவனத்தின் மனித வள மேலாளருக்கு ஏழு வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

பாதிக்கப்பட்ட பெண் தாக்கல் செய்த மேல்முறையீட்டில் அவருக்கு மூன்று பிரிவுகளில் தண்டனை விதிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு ரூ.750,000 இழப்பீடு மற்றும் ரூ.75,000 அபராதம் அரசுக்கு வழங்க உத்தரவிடப்பட்டது.

2015 ஆம் ஆண்டு திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி, சந்தேகத்தின் பலனை குற்றம் சாட்டப்பட்டவருக்கு சாதகமாக வழங்கி, குற்றம் சாட்டப்பட்டவரை விடுதலை செய்ததையடுத்து, பாதிக்கப்பட்ட பெண் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்திருந்தார்.

நீதியரசர்களான சம்பத் பி. அபயகோன் மற்றும் பி.குமாரரத்தினம் ஆகியோர் இந்த தண்டனையை வழங்கியுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுபானசாலைக்கு எதிர்ப்பு; மூதூரில் 15 பேர் கைதாகினர்





மூதூர், ஜூன் 27

**திருகோணமலை, மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரு தயபுரம் பகுதியில் மதுபானசாலை திறக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்த 4 பெண்கள் உட்பட பொதுமக்கள் 15 பேரை கைது செய்துள்ளதாக மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.**

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது.

இதில் 4 பெண்களும் 11 ஆண்களும் அடங்குவர். இதில் 5 ஆண்கள் கிண்ணியா பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப் பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

இந்த அமைதியின்மை சம்பவத்தில் இரு பொலிஸார் மற்றும் பெண் ஒருவரும் காயமடைந்த நிலையில் திருகோணமலை மாவட்ட மூதூர் தள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என பொலிஸார் தெரிவித்தனர். இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(எ)



# நியூ ஸ்டார் விளையாட்டுக் கழக உதைபந்தாட்ட சீருடை அறிமுகம்

ஓட்டமாவடி, ஜூன் 27

மட்டக்களப்பு, ஓட்டமாவடி அமீர் அலி மைதானத்தில் நடைபெற்ற ஓட்டமாவடி உதைபந்தாட்ட லீக் ஏ டிவிஷன் சுற்றுத் தொடரின் இரண்டாவது போட்டியில் ஓட்டமாவடி வளர் பிறை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஓட்டமாவடி நியூ ஸ்டார் விளையாட்டுக் கழகம் விளையாடியது.

இந்தப் போட்டி நியூ ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் புதிய சீருடை அறிமுக போட்டியாகவும் அமைந்தது.

இந்தப் போட்டியில் நியூ ஸ்டார் விளையாட்டுக் கழகம் 2: 0 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்று சுற்றுத் தொடரில் தனது இரண்டாவது வெற்றியைப் பதிவு செய்தது.

(எ)

# ஆசிரியர்களின் போராட்டத்தால் வெறிச்சோடிய பாடசாலைகள்

கிண்ணியா, ஜூன் 27

கிண்ணியா வலயக்கல்வி அலுவலகத்துக்கு உட்பட்ட முள்ளிபொத்தானை, குறிஞ்சாக்கேணி உட்பட அனைத்து பாடசாலை அதிபர்களும் ஆசிரியர்களும் நேற்றுக் காலை முதல் சுகவீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் பாடசாலைக்கு வந்த மாணவர்கள் பலர் மீண்டும் பாடசாலையை விட்டு வீட்டுக்குத் திரும்பிச் சென்றனர்.

ஒரு சில மணி நேரத்துக்கு பின்னர் பாடசாலைகள் அனைத்தும் வெறிச்சோடி கிடந்ததோடு பல ஆசிரியர்கள் பாடசாலைக்கு சமுகமளிக்காமையால் வகுப்பறைகளும் வெறிச்சோடிக் கிடந்தன.

தமக்கான சம்பள முரண்பாட்டை தீர்த்து தருமாறு கூறிய இப் போராட்டத்தில் ஈடுபடுவதாக ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

(எ)



# கடல் சுற்றாடல் பேணல் குறித்து கல்முனையில் கலந்துரையாடல்

கல்முனை, ஜூன் 27

கல்முனை மாநகர சபை ஆட்புல எல்லைக்குட்பட்ட கடல் சுற்றாடலின் கழிவு முகாமைத்துவம் தொடர்பான விசேட கலந்துரையாடல் கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில் நேற்றுப் புதன்கிழமை மாநகர சபையில் நடைபெற்றது.

கல்முனை மாநகர சபை ஆணையாளர் என். எம். நௌபீஸின் அறிவுறுத்தலின் பிரகாரம் மாநகர சபையின் வேலைகள் அத்தியட்சகர் பி. ரி. எம். நஹீமின் நெறிப்படுத்தலில் கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையின் அம்பாறை மாவட்ட உதவி முகாமையாளர் கே. சிவகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் கடல் மற்றும் கடலோர பிரதேசங்களின் சூழல் பாதுகாப்புக்கு அச்சுறுதலாக காணப்படுகின்ற விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன.



குறிப்பாக கடற்கரையை அண்மித்த பகுதிகளில் இயங்கி வருகின்ற தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரினால் ஏற்படும் சூழல் பாதிப்புகள், அதனால் பொது மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் அதனை முகாமைத்துவம் செய்வதில் காணப்படுகின்ற சவால்கள் மற்றும் தீர்வுகள் குறித்து இதன்போது விரிவாக ஆராயப்பட்டன.

மேலும், அடுத்த கூட்டத்தில் இதற்கான தீர்வுகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் தீர்க்கமான முடிவுகளை மேற்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் மத்திய சுற்றாடல் அதிகார சபை, கல்முனை பிரதேச செயலகம், கரையோரம் பேணல் திணைக்களம் மற்றும் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளும் பொலிஸ் மற்றும் கடற்படை அதிகாரிகளும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் தொழிற்சாலைகளின் உரிமையாளர்களும் பங்கேற்றனர். (எ)

# மட்டு. பாடசாலை மாணவர்களின் கல்வி செயல்பாடுகளுக்கு பாதிப்பு

மட்டக்களப்பு, ஜூன் 27

ஆசிரியர்கள் முன்னெடுத்த சுகவீன விடுமுறை போராட்டம் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்விச் செயல்பாடுகள் பாதிக்கப்பட்டிருந்ததுடன் பெற்றோரும் மாணவர்களும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

சம்பளப் பிரச்னைக்கு தீர்வு கோரி அதிபர்கள், ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் சுகவீன விடுமுறை போராட்டத்துக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் அழைப்பு விடுத்திருந்தது.

இந்த நிலையில் நேற்றைய தினம் மட்டக்களப்பு கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர்களின் வரவு குறைவானதாகவேயிருந்ததை காண முடிந்தது.

அத்துடன் பாடசாலைக்கு மாணவர்களின் வருகை குறைவான நிலையிலேயே இருந்ததுடன் பாடசாலைக்கு வருகை தந்த மாணவர்களில் பெரும்பாலானவர்கள் திரும்பிச் சென்றதை அவதானிக்க முடிந்தது.

அதேபோன்று பாடசாலைக்கு பிள்ளைகளை கூட்டிவந்த பெற்றோரும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டதுடன் மீண்டும் பிள்ளைகளை அழைத்துச்சென்றனர்.

சில பாடசாலைகளில் நேற்றைய தினம் சில ஆசிரியர்கள் கற்றல் செயல்பாடுகளை முன்னெடுத்ததாகவும் கல்வித் திணைக்கள தகவல்கள் தெரிவித்தன.

எவ்வாறாயினும் நேற்றைய தினம் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் காரணமாக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதாக பெற்றோர் கவலை வெளி[illegible]

(எ)

# திருக்கோவில் கல்வி வலயத்தின் விளையாட்டுப் போட்டி ஆரம்பம்

திருக்கோவில், ஜூன் 27

திருக்கோவில் கல்வி வலயத்தின் மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி நிகழ்வின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்றுப் புதன்கிழமை பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ. நசீர் தலைமையில் நடைபெற்றது.




அக்கரைப்பற்று தர்மசங்கரி மைதானத்தில் நடைபெற்ற அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம விருந்தினராக திருக்கோவில் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆர். உதயகுமார் கலந்து சிறப்பித்தார்.

இப்போட்டி நிகழ்வுகளில் திருக்கோவில் வலயத்துக்கு உட்பட்ட 47 பாடசாலைகள் பங்கு பற்றின.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# வடகொரியா மீண்டும் ஏவுகணை சோதனை!




**சியோல், ஜுன் 27**

**அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகளின் எச்சரிக்கைகளை பொருட்படுத்தாமல் வடகொரியா நேற்று மீண்டும் ஏவுகணைச் சோதனை நடத்தியுள்ளது கொரிய தீபகற்பத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.**


அணு ஆயுதங்களை தாங்கிச்செல்லும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை சோதனை செய்து உலக நாடுகளுக்கு அவ்வப்போது அதிர்ச்சி கொடுத்து வரும் நாடு வடகொரியா.

கொரிய தீபகற்பத்தில் வடகொரியா - தென்கொரியா இடையே பல ஆண்டுகளாக மோதல் நீடித்து வருகிறது. தன் எதிரி நாடுகளாக கருதும் தென் கொரியா, ஜப்பான், அமெரிக்காவை சீண்டும் வகையில் வடகொரியா தொடர்ந்து ஏவுகணை சோதனை நடத்தி வருகிறது. மேலும், தங்கள் நாட்டின் இறையாண்மைக்கு அச்சுறுத்தல் வந்தால் தாக்குதல் நடத்துவோம் என வடகொரியா எச்சரித்து வருகிறது.

இந்த நிலையில், கொரிய தீபகற்பத்தில் தென்கொரியா, அமெரிக்கா, ஜப்பான் இணைந்து போர் பயிற்சியில் ஈடுபடவுள்ளன. இதற்காக அமெரிக்க விமானம் தாங்கிய போர் கப்பல் கொரிய தீபகற்பத்தின் கடற்பரப்பில் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. அதேவேளை, வடகொரியா, தென்கொரியா இடையே அண்மையில் பலூன் மூலமான மோதலும் ஏற்பட்டு வருகிறது. தென்கொரியாவில் இருந்து வடகொரிய அரசுக்கு எதிரான வாசகங்கள் எழுதப்பட்ட பலூன்கள் பறக்கவிடப்பட்டன. இதற்குப் பதிலடியாக தென்கொ ரியாவுக்குள் பலூன் மூலம் குப்பைகளை வடகொரியா கொட்டியது.

இதன் தொடர்ச்சியாக ஏவுகணை சோதனை நடத்தியுள்ளது. வடகொரியா ஏவிய ஏவுகணை கடலில் விழுந்ததாக தென்கொரியா தெரிவித்துள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன் வடகொரியா ஏவுகணை சோதனை நடத்திய நிலையில் நேற்று மீண்டும் ஏவுகணை சோதனை நடத்தியதால் கொரிய தீபகற்பத்தில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

(எ)



## புஜேராவில் 13 ஆயிரம் ஆண்டுகள் முன் மனிதர்கள் வாழ்ந்த பகுதி கண்டுபிடிப்பு

புஜேரா, ஜுன் 27


புஜேராவில் 13 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மனிதர்கள் வாழ்ந்த பகுதியை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

அமீரகம் பழமையான வரலாறுகளை கொண்டுள்ளது. அதில் மலையும், மலைசார்ந்த பகுதியான புஜேரா தன்னுள் பல்வேறு வரலாறுகளை சுமந்து வருகிறது. அமீரகத்தில் பாறைகளால் ஆன மலைப்பகுதிகளைக் கொண்டது புஜேராவாகும். இந்தப் பகுதிகளில் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இயற்கையான பகுதிகள் அதிகம் உள்ளன. புஜேரா ஹஜார் மலைத் தொடரை ஒட்டிய இயற்கை வளம் நிறைந்த அமீரகத்தின் முக்கியமான பகுதியாகும்.

இங்கு அதிக அளவில் பனை மற்றும் பேரீச்சை மரங்கள் வளர்க்கப்படுகின்றன. புஜேராவில் பழங்காலத்தில் சர்கியின் என்ற பழங்குடியினரே ஆட்சி அதிகாரம் செலுத்தி வந்தனர். இதில் ஜெபல் காப் அடோர் என்ற பாறைகள் சூழ்ந்த பகுதியை புஜேரா அரசு பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவித்தது.

இந்தப் பகுதியில் புஜேரா இயற்கை வள பாதுகாப்பு கழகம் சார்பில் அகழ்வாராய்ச்சி நடத்தப்பட்டது. இதில் அமீரக குழுவுடன் ஜேர்மனி, இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த சர்வதேச அகழ்வாராய்ச்சி நிபுணர்களும் பங்கேற்று சுமார் 30 இடங்களில் மனிதர்கள் வாழ்ந்த தொன்மையான பகுதிகளை கண்டுபிடித்துள்ளனர். குறிப்பாக நாடோடியாக திரிந்த பழங்கால மக்கள் கூட்டம் தாங்கள் தங்குவதற்கு இந்த பாறை இடுக்குகளை பயன்படுத்திக்கொண்டது ஆய்வில் தெரிய வந்துள்ளது. சுமார் 7 ஆயிரத்து 500 முதல் 13 ஆயிரம் ஆண்டுகள் பழமையான பகுதியாக ஜெபல் காப் அடோர் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## தென் கொரியாவின் விமான நிலையத்தை குப்பை பலூன்களால் மூடிய வட கொரியா



சியோல், ஜுன் 27

வட கொரியாவில் இருந்து நேற்று மீண்டும் குப்பை பலூன்கள் தென் கொரியா நோக்கி அனுப்பப்பட்டன. இந்த பலூன்களில் ஒரு பலூன், தென் கொரியாவின் இன்சியான் சர்வதேச விமான நிலையத்தில் பயணிகள் முனையம் அருகே விமானங்கள் நிறுத்தப்படும் பகுதியில் விழுந்தது. மேலும் பல பலூன்கள் விமான நிலைய சுற்றுச்சுவர் அருகே பறந்துகொண்டிருந்தன. இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக விமான நிலையம் மூடப்பட்டது. ஓடுபாதையில் எந்த விமானமும் தரையிறக்க அனுமதிக்கப்படவில்லை. எந்த விமானமும் புறப்பட்டுச் செல்லவில்லை. மூன்று மணி நேரத்துக்குப் பிறகு நிலைமை சரியானதும், விமான சேவை தொடங்கியது.

நள்ளிரவு 1: 46 மணி முதல் அதிகாலை 4: 44 மணி வரை உள்நாட்டு மற்றும் சர்வதேச விமானங்களை இயக்குவதில் பாதிப்பு ஏற்பட்டதாகவும், இதன் பின்னர் ஓடுபாதைகள் மீண்டும் திறக்கப்பட்டு விமான சேவை தொடங்கியதாகவும் இன்சியான் சர்வதேச விமான நிலைய கழகம் தெரிவித்துள்ளது.

கடந்த இரண்டு நாட்களில் மட்டும் வட கொரியாவில் இருந்து வந்த சுமார் 100 பலூன்கள் தென் கொரியாவுக்குள் விழுந்ததாக இராணுவம் நேற்றுத் தெரிவித்தது. பெரும்பாலும் தலைநகர் சியோல் மற்றும் அதைச் சுற்றியுள்ள கியோங்கி மாகாணத்தில் விழுந்ததாகவும், அவற்றில் பெரும்பாலான பலூன்களில் பழைய பேப்பர் துண்டுகள் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

## இந்தியா கூட்டணியினரால் புத்தக விற்பனை அதிகரிப்பு

புதுடில்லி, ஜுன் 27

பிரதமர் மோடி தலைமையிலான பா. ஜ. க. கூட்டணி அரசைக் கண்டித்து காங்கிரஸ் தலைமையிலான இந்தியா கூட்டணியினர் முன்னெடுத்து வரும் போராட்டங்களால் கடந்த மூன்று மாதங்களில் 5, 000 அரசியல் சாசன புத்தகங்கள் விற்பனையாகியுள்ளன.

இந்தியா கூட்டணியினர் நடத்தும் இந்தப் போராட்டத்தால் அரசியல் சாசன புத்தகத்தின் விற்பனை அதிகரித்துள்ளதாக அதை வெளியிட்ட லக்னோவைச் சேர்ந்த ஈஸ்டர்ன் புத்தக கம்பனி தெரிவித்துள்ளது. இந்த புத்தகம் கடந்த 2009 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது. அதன் பின்னர் 16 பதிப்புகள் வெளியாகியுள்ளன. கடந்த



2023 ஆம் ஆண்டில் சுமார் 5, 000 புத்தகங்கள் விற்பனை செய்யப்பட்டன.

ஆனால், இந்தியா கூட்டணியினர் அரசியல் சாசன புத்தகத்துடன் நடத்தும் போராட்டத்தால், கடந்த 3 மாதத்தில் மட்டும் 5,000 புத்தகங்கள் விற்பனையாகியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## பயங்கரவாதத் தாக்குதலில் ரஷ்யாவில் 21 பேர் மரணம்!

மொஸ்கோ, ஜுன் 27

ரஷ்யாவில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலில் பலியானோர் எண்ணிக்கை 21 ஆக அதிகரித்தது.

ரஷ்யாவின் காகசஸ் மாகாணம் தாகெஸ்தான் பிராந்தியத்திலுள்ள கிறிஸ்தவ தேவாலயங்களை இலக்கு வைத்து பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

இதன்பின்னர் பயங்கரவாதிகள் அங்குள்ள பொலிஸ் நிலையம் மீதும் தாக்குதல் நடத்தினர். இதற்குப் பதிலடியாக பொலிஸார் நடத்திய தாக்குதலில் 6 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். எனினும் இந்தத் தாக்குதலில் தேவாலய அருட்தந்தை, பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட 15 இற்கும் மேற்பட்டோர் பலியாகினர். மேலும் பலர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் 6 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். இதன்மூலம் பலி எண்ணிக்கை தற்போது 21 ஆக அதிகரித்தது. (எ)

## அமெரிக்காவில் துப்பாக்கி சூடு! ஐவர் உயிரிழப்பு

வாஷிங்டன், ஜுன் 27

அமெரிக்காவில் நாளுக்கு நாள் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இந்த நிலையில், அந்த நாட்டின் நிவாடா மாகாணம் லாஸ் வேகஸ் நகரிலுள்ள அடுக்குமாடி குடியிருப்பில் துப்பாக்கி சூடு மேற்கொள்ளப்பட்டது. இதில் 4 பெண்கள் உட்பட 5 பேர் உயிரிழந்தனர். மேலும், 13 வயது சிறுமி படுகாயமடைந்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய-இலங்கை நல்லுறவை சீர்குலைக்கும் மல்கம் ரஞ்சித்!

## சிவசேனை அமைப்பு குற்றச்சாட்டு!

சென்னை, ஜூன் 27

**இந்திய-இலங்கை நல்லுறவை சீர்குலைக்கும் விதமாக கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை செயற்படுவதாக தமிழ்நாடு சிவசேனை அமைப்பின் மாநில செயல் தலைவர் க.சசிகுமார் குற்றம் சுமத்தியுள்ளார்.**

இலங்கையில் இருந்து தமிழகத்துக்கான கப்பல், விமான போக்குவரத்துகளை விரிவுபடுத்த இந்திய அரசாங்கம் முக்கியத்துவம் கொடுத்து வருவதாக க.சசிகுமார் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே பாலம் அமைக்கப்பட்டால் இலங்கையின் இறையாண்மைக்கு பங்கம் ஏற்படுமென கர்தினால் மல்கம் தெரிவித்த கருத்தை வன்மையாகக் கண்டிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

வளமான, வலிமையான நாடாக இலங்கையை உருவாக்க வேண்டும் என்பதற்காக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பல்வேறு ஒப்பந்தங்களில் கையழுத்துட்டுள்ளதாக க.சசிகுமார் மேலும் தெரிவித்தார்.

இந்திய அரசாங்கம் பல கோடி நிதியை இலங்கை அரசாங்கத்திற்கு ஒதுக்கியுள்ளதாக தமிழ்நாடு சிவசேனா அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, இந்திய அரசாங்கத்தினால் இலங்கையில் 10 ஆயிரம் பேருக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் மற்றும் பல்வேறு திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வருகிறது.

இந்நிலையில் இந்திய-இலங்கை நல்லுறவைச் சீர்குலைக்கும் விதமாக, இலங்கையின் கத்தோலிக்க ஆயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை செயற்படுவதாக தமிழ்நாடு சிவசேனா அமைப்பு கண்டனம் வெளியிட்டுள்ளது. (அ)

# புடைவை கடையின் மீது பெற்றோல் குண்டு வீச்சு!

யாழ்ப்பாணம், ஜூன் 27

நெல்லியடி பகுதியில் உள்ள புடைவைக்கடை ஒன்றின் மீது, மர்ம நபர்கள் சிலரால் பெற்றோல் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த நபர்களே, புடைவைக் கடைக்கு பின் புறமாக வந்து பெற்றோல் குண்டுகளை வீசி விட்டு தப்பிச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் கடை உரிமையாளரினால் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் இது குறித்த மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# யாழில் சிறுமி துஷ்பிரயோகம் 17 வயது சிறுவன் கைதானார்!

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்ப்பாணத்தில் 15 வயதுச் சிறுமியைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் 17 வயதான சிறுவனொருவன் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுமி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சிறுவனைக் கைது செய்த பொலிஸார் அவரை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியவேளை அவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இலங்கை - வியட்நாம் நாடுகளுக்கு இடையே கல்வி ஒத்துழைப்புக்கள்

## அமைச்சரவையும் அங்கீகாரம்

கொழும்பு, ஜூன் 27

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசுக்கும் இடையிலான கல்வி ஒத்துழைப்புக்கள் தொடர்பான ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதனடிப்படையில், இலங்கைக்கும் வியட்நாமுக்கும் இடையிலான உயர்கல்வித் துறையில் இருதரப்பு ஒத்துழைப்புக்களை மேலும் விருத்தி செய்ய வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது.

அதற்காக 2017-2020 வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்தைத் திருத்தங்களுடன் கூடியதாக 2024-2026 வரையான காலப்பகுதியில் நடைமுறைப்படுத்துவதற்கு இருதரப்பினரும் உடன்பாடு தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய, உயர்கல்வித் துறையில் அபிவிருத்தி மற்றும் புத்தாக்கம் தொடர்பான தகவல்கள் மற்றும் அனுபவங்களைப் பரிமாற்றிக் கொள்ளல், ஒருங்கிணைந்த ஆய்வுகளை நடாத்துதல், இருதரப்பினரின் பல்கலைக் கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கிடையே ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டங்களை ஊக்குவித்தல் போன்ற செயற்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மேலும், இருதரப்பினராலும் உடன்பாடு எட்டப்படுகின்ற துறைகளில் முதலாவது பட்டப் படிப்பு அல்லது பட்டப்பின் படிப்புக்களுக்கான புலமைப்பரிசில் பரிமாற்றம் மற்றும் இரு நாட்டு பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்களுக்கிடையே மாணவர்கள், கல்வியியலாளர்கள் பரிமாற்றம் போன்ற நோக்கங்களுக்காக 2024-2026 காலப்பகுதி வரை செல்லுபடியாகும் வகையில் அமைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பொருளாதார-தொழில்நுட்பத் துறைகளை ஒருங்கிணைக்க அரசாங்கம் நடவடிக்கை!

## ஜனாதிபதி ரணில் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 27

கணினி மற்றும் தகவல் தொழில்நுட்பத்தின் ஊடாக பொருளாதார - தொழிநுட்பத் துறைகளை ஒருங்கிணைப்பது குறித்து அரசாங்கம் விசேட கவனம் செலுத்தி வருவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

2024ஆம் ஆண்டுக்கான "டிஜிஎக்கொன்" உலக முதலீட்டு மாநாடு 'இலங்கையின் இது வரை பயன்படுத்தப்படாத திறனைப் பயன்படுத்துதல்' எனும் தொனிப்பொருளில் நேற்று முன் தினம் கொழும்பிலுள்ள தனியார் ஹோட்டலில் ஆரம்பமானது.

குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாம் விரைவான வளர்ச்சியில் கவனம் செலுத்த வேண்டுமானால், டிஜிற்றல் பொருளாதாரம் மற்றும் முழு புத்தாக்க கட்டமைப்பு அவசியம்.

அதை சுற்றுலா மற்றும் விவசாய நவீனமயமாக்கல் மூலம் ஆரம்பிக்க முடியும். இத்துறை மற்றொரு வேகமாக வளர்ந்து வரும் துறையாக அடையாளம் காணப்பட்டுள்ளது. அதனை எவ்வாறு மேம்படுத்துவது? எங்கிருந்து அதற்கான பயணத்தை ஆரம்பிப்பது என்ற கேள்விகள் உள்ளன.

அதற்காக முதலில், நமது பொருளாதாரத்தில் இந்தத் துறையை எவ்வாறு விரிவுபடுத்துவது என்பதைக் கண்டறிய வேண்டும். டிஜிற்றல் பொருளாதாரம் மற்றும் டிஜிற்றல் தொழில்நுட்பத்தின் புத்தாக்கம் என்பன நமக்கு எவ்வாறு பயனளிக்கும் என்று ஆராய வேண்டும்.

நாம் தற்போது அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய துறைகளை அடையாளம் கண்டுள்ளோம். விவசாய நவீனமயமாக்கல் டிஜிற்றல் துறையின் விரிவாக்கத்துடன் கைகோர்த்து செல்லும். டிஜிற்றல் பொருளாதார கேள்வி அதிகரித்துள்ளது.

ஆசியா மற்றும் ஆபிரிக்காவின் எதிர்கால தேவைகளைப் பார்க்கவேண்டியது அவசியம். வன்பொருள் மற்றும் மென்பொருள் துறைகளை உள்ளடக்கிய சீனா மற்றும் இந்தியா ஆகிய இரண்டு ஜாம்பவான்களுக்கு இடையே நாம் இருக்கிறோம்.

அந்த அறிவைப் பயன்படுத்தி மேற்படி நாடுகளுடன் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும். நமது பல்கலைக்கழகங்களில் இருக்கும் வசதிகளை மேம்படுத்தி அதனை இன்னமும் விரிவுபடுத்தி வருகிறோம்.

பல்கலைக்கழகங்களில் செயற்கை நுண்ணறிவு கற்பித்தலை அறிமுகப்படுத்த முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் உயர் தொழில்நுட்ப நகரங்களுக்கும் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த வேண்டும். இதற்காக குறைந்தபட்சம் 100 ஏக்கர் அல்லது அதற்கும் அதிகமான பரப்பளவு கொண்ட கொழும்பின் புறநகர் பகுதியில் காணியொன்றை பெறுவது குறித்து கவனம் செலுத்தியுள்ளோம்.

யாழ்ப்பாணம் போன்ற சிறிய பகுதிகளில் 25 முதல் 50 ஏக்கர் வரையிலான நகரங்களை நிறுவ முடியும்-என்றார். (அ)

# நீதித்துறையில் தலையிடுவதை எம்.பிக்கள் தவிர்க்கவேண்டும்!

## சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 27

பாராளுமன்ற சிறப்புரிமைகள் என்ற போர்வையில், நீதித்துறை மற்றும் நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் விவகாரங்களில் தலையிடுவதை பாராளுமன்ற உறுப்பினர்கள் தவிர்க்க வேண்டும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

அவ்வாறான செயற்பாடுகளால் நீதித்துறை மீதான பொது மக்களின் நம்பிக்கை மீறப்படுவது போன்ற மோசமான விளைவுகள் ஏற்படும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதித்துறையின் சுதந்திரத்தையும் சட்டவாட்சியையும் பாதுகாப்பதற்கு தாம் அர்ப்பணிப்புடன் இருப்பதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

சுதந்திரமான மற்றும் தைரியமான நீதித்துறையை ஆதரிப்பதாகவும், சட்டவாட்சியை பாதுகாப்பது அவசியம் எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அவ்வாறான விசாரணையின் பின்னர், நீதித்துறை அதிகாரி குற்றமிழைத்துள்ளார் என்பது உறுதி செய்யப்படும் பட்சத்தில், உரிய நடவடிக்கை எடுக்க முடியும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

# பெற்றோலியக் கூட்டுத்தாபன மறுசீரமைப்பு திட்டம் ஆரம்பம்!

கொழும்பு, ஜூன் 27

மறுசீரமைப்பு திட்டத்தின் கீழ் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அரசாங்கத்துக்கு சொந்தமான தனியான நிறுவனமாக ஸ்தாபிக்கப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர அறிவித்துள்ளார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் சுத்திகரிப்பு நிலையத்தின் சிரேஷ்ட முகாமைத்துவத்துடன் இடம் பெற்ற சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

எரிபொருளின் தரம், திறன், மற்றும் செலவைக் குறைப்பதற்குத் தேவையான முதலீட்டை ஈர்க்கவும் அதிகரிக்கவும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான சுத்திகரிப்பு நிலையம் நிறுவப்படுவதாக அவர் கூறினார்.

இதேவேளை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தற்போது அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்கள் மற்றும் சம்பளக் கட்டமைப்பும் திருத்தியமைக்கப்படும் மற்றும் பல செயல்பாடுகள் மற்றும் சேவைகளுக்காக டிஜிட்டல் தளங்கள் அறிமுகப்படுத்தப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டை மீட்ட என்னுடன்....

ரணில் விக்கிரமசிங்க.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றிரவு நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்த முக்கிய அம்சங்கள் வருமாறு,

இன்றைய தினம் பாரிஸ் நகரில் நாட்டின் உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களுடன் கடன் மறுசீரமைப்பு குறித்து இறுதி இணக்கப்பாட்டை எட்டினோம். இதேபோன்று சீன எக்ஸிம் வங்கியுடன் பீஜிங்கில் இணக்கத்தை எட்டினோம்.

இந்த பேச்சுகள் வெற்றியடைய, எமது கடன் வழங்குநர்களான சீனா மற்றும் சீன எக்ஸிம் வங்கி, உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவில் இணைத்தலைமை வகிக்கும் இந்தியா, ஜப்பான், பிரான்ஸ் ஆகிய நாடுகளும் அந்தக் குழுவின் மற்ற உறுப்பினர்களும், பாரிஸ் கழகத்தின் செயலகமும் எமக்கு வழங்கிய ஆதரவுக்கு நான் நன்றி கூறுகிறேன்.

இந்தப் பேச்சுகளில் கலந்துகொண்ட இலங்கை மற்றும் ஏனைய நாடுகளின் பிரதிநிதிகளுக்கும், எமக்கு ஆலோசனை வழங்கிய லஸார்ட் மற்றும் கிளிபோர்ட் சான்ஸ் அதிகாரிகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம் .

இந்த ஒப்பந்தங்களின் மூலம், வெளிநாடுகளில் உள்ள அனைத்து இருதரப்பு கடன் தவணைகளையும் 2028 ஆம் ஆண்டுவரை ஒத்திவைக்க முடியும். அதன்பிறகு, சலுகை நிபந்தனைகள் அடிப்படையில் அனைத்து கடன்களையும் செலுத்த 2043 வரை நீண்டகால அவகாசம் கிடைக்கும்.

நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்து இப்போது மீண்டிருக்கின்றது. பொருளாதார நெருக்கடியில் வீழ்ந்த எந்தவொரு நாடும் இவ்வாறு மீண்டெழுந்ததாக வரலாறு இல்லை. அதை நான் சாத்தியப்படுத்தியிருக்கின்றேன். ஆதலால், தம் எதிர்காலம் தொடர்பில் மக்கள் சிந்திக்க வேண்டிய தருணம் இது.

ஆரம்பத்திலிருந்தே பிரச்னையை புரிந்துகொண்டு நடைமுறை சாத்தியமான தீர்வுகளை வழங்கிய என்னுடன் நாட்டை முன்னேற்றுவீர்களா? அல்லது இன்னும் பிரச்னையை புரிந்து கொள்ளாமல், இருட்டில் தடவிக் கொண்டு அதிகாரத்தைப் பெற முயற்சிக்கும் குழுக்களுடன் பயணிக்க விரும்புகிறீர்களா?

நீங்கள் சரியான பாதையில் சென்று உங்களதும் நாட்டினதும் எதிர்காலத்தை மேம்படுத்துவீர்களா? அல்லது பயணத்தை மாற்ற வேண்டுமா? தவறான பாதைக்குத் திரும்பினால் அல்லது தவறான பாதையில் பயணித்தால் ஏற்படும் விளைவுகளை நாம் அனைவரும் நன்கு அறிவோம். எனவே, சரியான முடிவை எடுங்கள். அந்த முடிவை எடுக்க உங்களுக்கு முழு உரிமையும் சுதந்திரமும் உள்ளது. உங்கள் முடிவு ரணில் விக்கிரமசிங்கவின் எதிர்காலத்தை தீர்மானிக்காது - நாட்டின் எதிர்காலத்தையும் உங்கள் எதிர்காலத்தையும் மட்டுமன்றி அது உங்கள் குழந்தைகளின் எதிர்காலத்தையும் தீர்மானிக்கப் போகிறது.

பொருளாதாரம் படுகுழியில் வீழ்ந்து வங்குரோத்து நிலையிலிருந்த நாட்டை மீட்க எனது கட்சிக்கு பாராளுமன்றத்தில் அதிகாரம் இருக்கவில்லை. நான் நியமித்த அரசாங்க அதிகாரிகளும் இருக்கவில்லை. அமைச்சர்களும் இருக்கவில்லை. ஆனால், அவை எதுவுமேயில்லாமல், உலகையே வியப்பில் ஆழ்த்தும் வகையில் இரண்டு வருட காலத்தில் நாட்டை சுமுகமான நிலைமைக்கு கட்டியெழுப்ப என்னால் முடிந்தது. அதை யோசித்துப் பாருங்கள். இரண்டு வருடங்களுக்கு முன்பு வீதிகளில் எவற்றை கண்டோம்? இன்று எதனைக் காண்கிறோம்.

ஆபத்தான தொங்கு பாலத்திலிருந்து இலங்கை அன்னையை மீட்டுத் தருவதாக அன்று நான் வாக்குறுதி அளித்தேன். குழந்தையைப் பத்திரமாக மீட்டு வந்திருக்கிறேன். இப்போது என்ன நடந்தது? "ஹூனுவடயே" நாடகத்தில் வருவது போல், குழந்தையை காக்க எந்த ஆதரவும் தராத குழுக்கள் தற்போது குழந்தையின் உரிமையை பெறப் போராடுகின்றனர். தொங்கு பாலத்தைக் கடக்கும் முன் குழந்தையை சொந்தமாக்க முயற்சிக்கிறார்கள். குழந்தையை இரு பக்கமாக அன்றி அனைத்துப் பக்கங்களிலும் பிடித்து இழுக்கின்றனர்.

நாம் அறிந்த "ஹனுவடயே" நாடகத்தின் நிறைவில், குழந்தையின் உரிமை உண்மையான தாய்ப் பாசமுள்ள அன்னைக்கு கிடைக்கிறது. "தகுதியானவருக்கு தகுதியானது கிடைக்க வேண்டும். குதிரை சரியான வண்டியோட்டியிடம் கொடுக்கப்பட வேண்டும்" என்று நாடகத்தின் கதாசிரியர் கூறுகிறார். அந்தக் கதையில் வரும் நீதிபதி அஸடக்கைப் போன்று நீங்களும் சரியான முடிவை எடுக்க வேண்டும். அப்போது தகுதியானவருக்கு தகுதியானது கிடைக்கும் - என்றார். (அ-ஐ)

## மின்சாரம்...

மேல் தளத்துக்கு சென்றபோது மின்சாரத்தால் தாக்குண்டுள்ளார். மேலே சென்றவரை காணவில்லையென அருகிலுள்ள கடை ஒன்றில் பணியாற்றும் மற்றைய இளைஞர் மேல் தளத்துக்கு சென்றபோது மின்சாரம் தாக்கியதில் கீழ்த்தளத்துக்கு தூக்கி வீசப்பட்டார்.

உயிருக்கு ஆபத்தான நிலையில் அங்கிருந்தவர்களால் மீட்கப்பட்ட இருவரும் உடனடியாக புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். (ஐ)

## இன்றும்...

முன்னெடுக்கப்படுவதாக அந்த சங்கத்தின் உபதலைவர் தீபன் திலீசன் விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அவர் விடுத்த அறிக்கையில், "அதிபர், ஆசிரியர்களுக்கு வழங்க வேண்டிய சம்பள முரண்பாட்டுக்கு தீர்வை வழங்காது தமக்கு கிடைக்க வேண்டியதை கேட்கும் அதிபர், ஆசிரியர்களின் ஜனநாயக ரீதியான போராட்டத்தை நசுக்க, நீர்த்தாரை பிரயோகம் மற்றும் கண்ணீர் புகைக் குண்டுகள் வீசி, அதிபர், ஆசிரியர்கள் மீது நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதல்கள் நடத்திய ரணில்- ராஜபக்ஷ அரசாங்கத்தின் அடக்கு முறையை கண்டித்து நாளை (இன்று) வியாழக்கிழமை அதிபர், ஆசிரியர் களின் சுகயீன விடுமுறைப் போராட்டம் தொடரவுள்ளது. இந்தப் போராட்டத்துக்கு் அதிபர், ஆசிரியர், பெற்றோர்கள் ஆதரவளிக்க வேண்டும் - என்றும் கூறப்பட்டுள்ளது. (ஐ)

## மாங்குளம்...

வழியில் நின்றது. நின்று கொண்டிருந்த பேருந்தின் பின்புறமாக பழுதுபார்க்கவும் - அதற்கு உதவியாகவும் பேருந்தின் சாரதி, நடத்துநர் மற்றும் பயணிகள் சிலரும் நின்றிருந்த னர்.

அப்போது, அதே திசையில் பயணித்த லொறி பேருந்தின் பின்புறமாக மோதியது. இதன்போது, திருத்தப் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் படுகாயங்களுக்கு உள்ளாகினர். பேருந்தின் சாரதியும் இரு பயணிகளும் மாங்குளம் ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தனர்.

பேருந்தின் நடத்துநரும் மற்றுமொருவரும் மாங்குளம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தவரான பேருந்தின் சாரதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 39 வயது நபர் என்று தெரிய வந்தது. (ஐ)

## சகல வழங்குநர்களுடனான...

தரப்பு கடன் வழங்குநர்களுக்கான கடன் மறுசீரமைப்பு இணக்கப்பாடு களை வெற்றிகரமாக நிறைவுசெய்துள் ளது.

இந்த உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவுடன் ஜப்பான், இந்தியா, பிரான்ஸ் இணைந்து தலைமை தாங்கின. அவுஸ்திரேலியா, ஆஸ்திரியா, பெல்ஜியம், கனடா, டென்மார்க், ஜேர்மனி, ஹங்கேரி, கொரியா, நெதர்லாந்து, ரஷ்யா, ஸ்பெயின், ஸ்வீடன், ஐக்கிய இராச்சியம் மற்றும் அமெரிக்கா ஆகியவை இந்த உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் குழுவின் ஏனைய உறுப்பினர்களாக இருந்தன.

உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் மற்றும் சீனா எக்ஸிம் வங்கி மூலம் மறுசீரமைக்கப்பட வேண்டிய கடனின் ஒருங்கிணைந்த மதிப்பு 10 பில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும். 2022ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை அடுத்து இலங்கை அந்நிய செலாவணிக் கையிருப்பை இழந்தது. இதனால் கடன் செலுத்த முடியாத நாடாக அறிவித்தது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் நிலைபேற்றுத்தன்மை பகுப்பாய்வு ஆரம்பத்தில் கடன் மறுசீரமைப்பு செயல்முறையின் மூலம் கடன் நிவாரண அளவு தீர்மானிக்கப்படுகிறது. அதன் பின்னர், குறித்த கடன் வழங்குநர்கள் மற்றும் கடனில் உள்ள நாடும் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் நிலைபேற்றுத் தன்மை பகுப்பாய்வு மூலம் காட்டப்படும் இலக்கை அடையத் தேவையான பணிகளை பூர்த்தி செய்ய வேண்டும். இதற்காக கடன் மறுசீரமைப்புப் பேச்சுகளை இலங்கை தொடர்ந்து முன்னெடுத்தது.

சர்வதேச நாணய நிதிய கடன் நிலைத்தன்மை பகுப்பாய்வில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள இலக்குகளின் அடிப்படையில் வழங்கப்படும் கடன் நிவாரணம் ஒவ்வொரு நாட்டுக்கும் மாறுபடும். கடன் வழங்கும் நாடுகள் வெவ்வேறு வழிகளில் கடன் நிவாரணம் வழங்குகின்றன. உத்தியோகபூர்வ கடன் வழங்கும் குழு மற்றும் சீனாவின் எக்ஸிம் வங்கி போன்ற உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் இவற்றை வெவ்வேறாக தீர்மானிக்கின்றன.

காலத்தை நீடித்தல், விதிமுறைகளை தளர்த்துதல் மற்றும் வட்டி விகிதங்களைக் குறைத்தல் ஆகியவற்றின் மூலம் கடன் நிவாரணம் வழங்கப்படுகிறது. உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழு மற்றும் சீனாவின் எக்ஸிம் வங்கியுடனான மறுசீரமைப்பு ஒப்பந்தங்கள் இரண்டும் குறிப்பிடத்தக்க கணிசமான கடன் நிவாரணத்தை இலங்கைக்கு வழங்கியுள்ளது.

பொருளாதாரம் மீளவும் வழமைக்கு திரும்பும் வரையில் எதிர்காலத்தில் கடன் சேவைத் திறன் மேம்படும் வரை குறுகிய காலத்தில் இலங்கைக்கான தற்போதைய கட்டண சுமையை இது குறைக்கும். இதை மதிப்பிடுவதற்காக உத்தியோகப்பூர்வ கடன் வழங்குநர் குழு மற்றும் சீனா எக்ஸிம் வங்கியுடனான மறுசீரமைப்பு ஒப்பந்தங்கள் ஊடாக ஐ. எம். எவ்வுடனான நிகழ்ச்சி நிரல் அமுல்படுத்தப்படும் காலப்பகுதியில், செலுத்த வேண்டிய குறித்த கடனில் நிவாரணம் வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு கடன் வழங்குநருடனும் கடன் மறுசீரமைப்பு மேற்கொள்ளும் போது ஐ. எம். எவ். கடன் நிலைத்தன்மை பகுப்பாய்வில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அடைய வேண்டும். அத்துடன், ஏனைய கடன் வழங்குநர்களுடன் எட்டப்பட்ட கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்களுடன் ஒப்பிடப்படும் வகையில் இது இருக்க வேண்டும்.

அடுத்த கட்டமாக, வர்த்தக பிணைமுறி உரிமையாளர்களுடனான இறுதிக் கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்களை எட்டுவதை இலங்கை துரிதப்படுத்தும். முறையான கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்களை வெற்றிகரமாக முடிப்பது இந்த செயல்முறையை எளிதாக்கும்.

இந்தக் கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்கள் மூலம்,

இலங்கையின் வரி வருவாயை கடனை செலுத்துவதற்கு பதிலாக அத்தியாவசிய பொது சேவைகளுக்கு பயன்படுத்த முடியும். இது பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு கால அவகாசம் கிட்டும், முக்கிய உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு இருதரப்பு நிதியுதவி வசதிகளைப் பெறுவதை மீண்டும் தொடங்கலாம். வரவு - செலவுத்திட்டத்தின் மூலதன செலவினங்களை ஆதரிக்க குறுகிய கால வெளிநாட்டு நிதி கிடைப்பதில் இது குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும். இது நிர்மாணத்துறை போன்ற துறைகளில் சாதகமான விளைவுகளையும், முக்கியமான உள்கட்டமைப்பு மேம்பாட்டில் நடுத்தர முதல் நீண்ட கால சாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் - என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## கொலையாக...

ஒருவர் உயிரிழந்தார். கடற்படை படகில் இருந்து இந்திய மீனவர்களின் படகுக்கு செல்ல முயற்சித்தபோது இந்திய மீன்பிடி படகு ஆபத்தை விளைவிக்கும் வகையில் செலுத்தப்பட்டதாலேயே இந்த விபத்து ஏற்பட்டது. இதில் பிரியந்த ரத்நாயக்க என்ற சிப்பாய் நேற்று முன்தினம் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஐ.சி.சியில்...

பிரிட்டனை தளமாகக் கொண்டியங்கும் இணையம் ஒன்றுக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், உலக அரங்கில் நீதிக்கான எங்கள் வேண்டுகோள்களை நாம் வலுப்படுத்தவேண்டும். பேரழிவையும் உயிரிழப்பையும் நிலத்தை இழந்ததை யும் நாங்கள் மறக்கமாட்டோம்.

மே 2009க்கு முன்னதாகவும் மே 2009 இல் இடம்பெற்ற யுத்த குற்றங்களுக்காக இதுவரை எவரும் பொறுப் புக்கூறலுக்கு உட்படுத்தப்படவில்லை என்பது உண்மையாகவே நம்பமுடியாத விடயம்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை மூலம் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதன் மூலம் மாத்திரமே நீதியை நிலைநாட்ட முடியும் - என்றார். (ஐ)

## நாடு...

ஆசிரியர் சங்கத்தின் அழைப்பின் பேரில் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்துக்கு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் உள்ளிட்ட ஆசிரியர் சங்கங்கள் ஆதரவு தெரிவித்திருந்தன.

இதனால், வடக்கு, கிழக்கு, மலையகம் உள்ளிட்ட நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளில் கற்பித்தல் சேவை முடங்கியது. இதனால், பாடசாலைகளுக்கு சென்ற மாணவர்கள் பலர் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அதிபர்...

இந்தப் போராட்டத்துக்கு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கமும் ஆதரவு தெரிவித்திருந்தது.

இந்த நிலையில், நேற்றைய தினம் அதிபர்கள், ஆசிரியர்கள் ஒன்றிணைந்து பெரும் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். கோட்டை புகையிரத நிலையத்துக்கு அண்மையாக ஆரம்பிக்கப்பட்ட பேரணி பொலிஸாரின் தடைகளை மீறி ஜனாதிபதி செயலகத்தை நோக்கி முன்னேறியது.

இதையடுத்து, அங்கு குவிந்திருந்த பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் பேரணியை தடுத்து நிறுத்துவதற்காக தண்ணீர் தாரை பிரயோகம் செய்ததுடன் கண்ணீர் புகைக் குண்டுகளையும் வீசினர். இதைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் பெரும் பதற்றநிலை நிலவியது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## இராணுவத்திடம் கையளித்த எங்களின் உறவுகள் எங்கே?

### முல்லையில் தாய்மார்கள் கண்ணீர்



முல்லைத்தீவு, ஜூன் 27

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 7 ஆண்டுகளுக்கு மேலாக நீதி கோரி போராட்டத்தை முன்னெடுத்துவரும் முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்று முல்லைத் தீவு நகர சுற்றுவட்டத்தில் நீதி கோரி கவனயீர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டனர்

வேண்டும் வேண்டும் சர்வதேச நீதி வேண்டும், எங்கே எங்கே உறவுகள் எங்கே?, இராணுவத்திடம் கையளித்த எங்களது உறவுகள் எங்கே?, வேண்டாம் வேண்டாம் ஓ.எம்.பி வேண்டாம் உள்ளிட்ட பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறும், கொலைகாரனால் நீதி வழங்க முடியுமா? காணாமல் போனவர்களின் குடும்பங்களை மிரட்டுவதையும் அச்சுறுத்துவதையும் நிறுத்துங்கள், கொடுப்பனவுகளை கொடுப்போம் என்று சொல்வது கொலை செய்த கதையை மறைக்கவே, உங்கள் இராணுவத்தை நம்பி கையில் ஒப்படைத்த எங்கள் பிள்ளைகள் எப்படி காணாமல் ஆக்கப்பட்டார்கள் உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறும் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்

குறித்த போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் கருத்து தெரிவிக்கையில் -

சர்வதேசத்திடம் நீதி கோரி போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம். ஐ.நா சபையில் எமது பிரச்சினை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் நீதி கோரி போராட்டத்தினை மேற்கொண்டு வருகின்றோம் .

தமது பிள்ளைகளை உறவுகளை தேடிக்கொண்டிருக்கும் பெற்றோர்கள் இறந்து கொண்டிருக்கின்றார்கள்.

இலங்கையில் ஓ.எம்.பி அலுவலகத்தினால் நட்டஈடு கொடுத்து மரண சான்றிதழும் கொடுக்கும் ஏற்பாடுகள் மக்களை விரட்டி விரட்டி செய்கின்றார்கள்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தொடர்ச்சியாக கிராம உத்தியோகத்தர் ஊடாகவும் கிராம அமைப்புக்கள் ஊடாகவும் அழுத்தங்கள் கொடுத்தும் மக்களை மிரட்டுகின்றார்கள்.

இந்த மிரட்டல்களை தாண்டி எமக்கான நீதி கிடைக்கவேண்டும், சர்வதேச நீதிமன்றில் நிறுத்த வேண்டும், குற்றம் புரிந்தவர்களை சர்வதேச கூண்டில் ஏற்றி நீதி கிடைக்கவேண்டும்,எங்கள் உறவுகளுக்கு என்ன நடந்தது என்றுதான் போராடி வருகின்றோம்- என்றனர். (அ)

# இன்னும் 100 நாட்களில் புதியதொரு ஜனாதிபதி

### தேர்தலை ஒத்திவைக்கும் சாத்தியம் இல்லை என்கிறது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, ஜூன் 27

**ஜனாதிபதித் தேர்தல் குறித்து பல்வேறு கருத்துகள் முன் வைக்கப்பட்டு வருகின்ற போதிலும், ஜனாதிபதித் தேர்தலை உரிய நேரத்தில் நடத்துவதைத் தவிர வேறு வழியில்லை என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.**

அத்துடன், இன்னும் 100 நாட்களில் புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பம் மக்களுக்கு கிடைக்கும் எனவும் அக்கட்சியின் தேசிய அமைப்பாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்துரைக்கையிலே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுப்பது மற்றும் நாட்டு மக்களுக்கு பொறுப்புக்கூறக்கூடிய ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தை அமைப்பதற்கான நல்லதொரு சந்தர்ப்பம் ஜனாதிபதி தேர்தலாகும்.

ஜனாதிபதித் தேர்தலை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எந்தவொரு காரணத்திற்காகவும் பிற்போடவோ அல்லது நடத்தாதிருக்கவோ முடியாது.

தேர்தல் தொடர்பில் நாடு முழுவதும் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. சிலர் ஜனாதிபதிக்கு மேலும் கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்கின்றனர். சிலர் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்காக சர்வஜன வாக்கெடுப்பு அவசியம் என்கின்றன.

இருப்பினும், இந்த நாட்டு மக்கள் வாக்குப் பலத்தை பயன்படுத்தும் உரிமையினை எந்த காரணம் கொண்டும் பறித்தெடுப்பதற்கு நாம் இடமளிக்கப்போவதில்லை என்பதை நாம் அனைவருக்கும் கூறிக்கொள்கின்றோம்.



நாட்டு மக்களின் வாக்கின் மூலம், மக்களின் விருப்பத்திற்கமைய மக்கள் தெரிவுசெய்யும் ஜனாதிபதியை விடுத்து, அவர்களின் விருப்பத்திற்காக நாட்காலியில் அமர்ந்திருக்கும் வகையில் சட்டத்தினை திருத்தியமைப்பதற்கு எந்தவகையிலும் அனுமதி இல்லை என்பதை நாம் தெளிவாகக் கூறிக் கொள்கின்றோம் - என்றார். (அ)

# 8750 பில்லியன் நிதி ஒதுக்கீட்டுக்கு நேரடி ஒப்புதல் அளித்துள்ள ரணில்

### தேர்தல் பிரசாரத்துக்காகவே இந்த நிதி என்கிறார் பீரிஸ்

கொழும்பு, ஜூன் 27

எதிர்வரும் மூன்று மாதங்களுக்குள் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள ஜனாதிபதியால் நேரடியாக செலவுகளை செய்யும் வகையில் 8750 பில்லியன் நிதி ஒதுக்கீட்டுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

8750 பில்லியன் நிதியை பயன்படுத்தி மக்களுக்கு பயனாகும் அபிவிருத்தித் திட்டங்களை வெறும் மூன்று மாதங்களில் மேற்கொள்ள முடியும் என மூளையுள்ள எவரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

ஜனாதிபதியின் தேர்தல் பிரசாரத்துக்காகவே இந்த நிதியை ஒதுக்கீடு செய்துள்ளனர். ஒன்றிணைந்த நிதியங்கள், அரச நிதியங்கள் மற்றும் கடன் ஊடாக இந்த நிதியைப் பெற்றுக்கொள்ள அனுமதியளிக்கப்பட்டுள் ளது.

இந்தத் திட்டத்தை எதிர்க்கட்சிகள் கடுமையாக எதிர்த்தபோதிலும், ஆளுங்கட்சி அதன் செல்வாக்கை பயன்படுத்தி இதற்கான நாடாளுமன்ற அனுமதியை கடந்தவாரம் பெற்றிருந்தது. எப்படிப்பட்ட ஒரு ஜனாதிபதித் தேர்தல் நடைபெற போகிறதென இதன்மூலம் எம்மால் அறிந்துக்கொள்ள முடியும்.

ஜனாதிபதி செல்லும் இடமெல்லாம் பொருட்களை பகிர்ந்தளித்து வருகிறார். இரண்டு வருடம் பதவியில் இருந்தார். ஆனால், இப்போதுதான் மக்கள் மீது அவருக்கு அளவுகடந்த அன்பு ஏற்பட்டுள்ளது.

மக்களுக்கு இதன்மூலம் பயன் இருந்தால் அதனை எவரும் எதிர்க்க மாட்டார்கள். ஆனால், அதற்கு மாறான வேலைத்திட்டங்களையே முன்னெடுக்கின்றனர். இதன் மூலம் மக்களுக்கு எவ்வித பலனும் ஏற்பட போவதில்லை - என்றார். (அ)

## கடற்படைச் சிப்பாய் உயிரிழப்பு; இந்தியா-இலங்கை விசேட பேச்சு

கொழும்பு, ஜூன் 27

இந்திய மீனவர்களைக் கைது செய்ய முற்பட்ட போது இலங்கைக் கடற்படை சிப்பாய் உயிரிழந்த சம்பவத்தை இந்திய மத்திய அரசாங்கத்தின் கவனத்திற்கு இலங்கை அரசாங்கம் கொண்டு சென்றுள்ளது.

இந்தியாவுக்கான இலங்கை தூதுவர் மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கர் ஆகியோருக்கு இடையில் நேற்று முன் தினம் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது கடற்படை சிப்பாய் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

கடற்றொழிலாளர்கள் அனுபவித்து வரும் பல பிரச்னைக்கு விரைவான தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியத்தையும் இலங்கை தூதுவர் இந்தியாவிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், இரு நாட்டு கடற்றொழில் அமைச்சுக்களை தொடர்பு கொண்டு பிரச்னைக்கு நிரந்தர தீர்வை எட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென தாம் வலியுறுத்தியதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 214 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இந்திய மீன்பிடிப் படகுகளின் எண்ணிக்கை 28 என்றும் கடற்படை பேச்சாளர் தெரிவித்துள்ளார். (அ)

## ஜப்பான் செல்கிறார் அமைச்சர் அலி சப்ரி

கொழும்பு, ஜூன் 27

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஜூலை 01 முதல் ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் யோகோ கமிகாவாவின் அழைப்பின் பேரில் இந்த விஜயம் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது

இந்த விஜயத்தின்போது, வெளிவிவகார அமைச்சர் தனது ஜப்பானிய பிரதியமைச்சருடன் இருதரப்பு கலந்துரையாடல்களில் ஈடுபடுவார் என்றும் அமைச்சர் அலி சப்ரி ஜப்பானின் தலைமை அமைச்சரவைச் செயலாளர் யோஷிமாசா ஹயாஷி உட்பட பல முக்கிய பிரமுகர்களையும் சந்திக்கவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## நாட்டில் ஜூலை மாதம் முதல் விசேட பாதுகாப்பு நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 27

பாதாள உலகக் குழுக்களின் துப்பாக்கிகளை கைப்பற்றும் நோக்கில் எதிர்வரும் ஜூலை மாதம் முதல் இரண்டு மாத கால விசேட நடவடிக்கையை ஆரம்பிக்குமாறு பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் விடுணத்துள்ள பணிப்புரையின் பிரகாரம் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் பாதாள உலகத்தை ஒடுக்குவதற்கு ஆயுதப் படைகளின் துப்பாக்கிகள் பாரிய தடையாக இருப்பதாக பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், பொலிஸாரின் உதவியுடன் இந்த விசேட நடவடிக்கை நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக பொலிஸ்மா அதிபர் கூறியுள்ளனர்.

எவ்வாறாயினும், நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் நீதி நடவடிக்கையை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [illegible] அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.06.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள [illegible] அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org